தமிழ் முரசு

1-21

தமிழ் முரசு

தொகுதி : க	ஆசிரியர் : ம. பொ. சிவஞானம்	பகுதி உக

பொருளடக்கம்

தமிழரசு மாநாடு	தலையங்கம்	... ௩
கிளைக் கழகங்கள்		... க௩
தமிழன் திருநாள்	கொ. மொ. ஜனார்தனம்	... க௭
மலர் அன்பு	புத்தனேரி, ரா. சுப்பிரமணியன்	... உ௰
சென்னை நாகரிகம்	தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்	... உ௩
பாரதியின் பெயரால்......!	'ஞானம்'	... ௩௰
வாழ்வு	'வல்லிக்கண்ணன்'	... ௩௭
இனம் ஒழிப்பும் எதிர் பிரசாரமும்	கொ. மொ. ஜனார்த்தனம்	... ௩௯
மதிப்புரை		... ௪௩

கதைகளில் வருவன கற்பனைப் பெயர்களே.

விலை 4 அணா

I - II - 47

தமிழரசுக் கழக மாநாடு

9-11-47 ஞாயிற்றுக்கிழமை

சென்னை

செயின்ட் மேரீஸ் மண்டபத்தில்

நடைபெறும்.

நேரம் : *காலை* **9-30** *முதல்* **12** *வரை*
மாலை **4-30** *முதல்* **8** *வரை*
பிற்பகல் **1** *முதல்* **4** *மணிவரை பிரதிநிதிகள் கூட்டம்.*

திரு. ம. பொ. சிவஞானம்

தலைமை வகிப்பார்

மதுரை "தமிழ் நாடு" வாரப் பத்திரிகை ஆசிரியர்

திரு. ரா. அரங்கசாமி ("மாஜினி")

மாநாட்டைத் திறந்துவைப்பார்.

திரு. வி. க.

வ. உ. சிதம்பரனூர் *படத்தைத் திறந்து வைப்பார்.*

எல்லா தமிழ் ஜில்லாக்களிலிருந்தும் சித்தூர் மாவட்ட தமிழ்த் தாலுக்காக்களிலிருந்தும் புதுக்கோட்டை, பிரெஞ்சுத் தமிழகம், திருவிதாங்கூர் தமிழகம் ஆகிய பிரதேசங்களிலிருந்தும் மாநாட்டிற்குப் பிரதிநிதிகள் வருவார்கள்.

கிளைக் கழகங்களும் பிரதிநிதிகளும் தாங்கள் கொண்டுவர விருக்கும் தீர்மானங்களை 5-11-47க்குள் செயலாளருக்கு அனுப்பிவைக்க வேணுமாய்க் கோருகிறேன்.

தே. பொ. மீனாட்சிசுந்தரன்,

வரவேற்புக்குழுத் தலைவர்.

தமிழரசு மாநாடு

தமிழரசுக் கழக மாநாடு இம் மாதம் ஒன்பதாம் தேதி சென்னை நகரில் நடைபெற இருக்கிறது. பல்மொழிப் புலவர், நெடுநாளைய தேச பக்தர் திரு. தெ. பொ. மீனுட்சி சுந்தரனர் மாநாட்டின் வரவேற்புத் தலைவராக இருப்பதும், தமிழகத்தின் தலைசிறந்த வாரப் பதிப்பாகிய "தமிழ் நாடு" பத்திரிகையின் ஆசிரியர் திரு. அரங்கசாமி ("மாஜினி") மாநாட்டைத் திறந்துவைப்பதும் மகிழ்ச்சிக்குரிய செய்திகளாகும்.

தமிழரசு மாநாடு கூடுவதன் நோக்கமென்ன? குமரிமுதல் வேங்கடம் வரையுள்ள புதிய தமிழகத்தை உருவாக்கும் கிளர்ச்சிக்குத் திட்டமிடுவதா? ஆம், தமிழகப் பிரிவினை, துண்டுபட்ட தமிழ் நிலங்களை ஒன்றுபடுத்தல் ஆகிய திட்டங்கள் மாநாட்டின் முன்னர் வருவது திண்ணம். ஆனால், மாநாடுகூடுவது அதற்காகமட்டுமல்ல! தமிழகத்தைத் தனி மாகாணமாக்கிவிடுவதாலோ, இழந்த எல்லைகளை மீட்டுவிடுவதாலோ சுதந்தர இந்தியாவில் தமிழினத்தாருக்குச் சுகவாழ்வு தேடிவிட்டதாகாது. தமிழினத்தார் சிறந்து வாழ, தமிழகம் செழிப்புடன் விளங்க, தமிழகத்தில் சுதந்தர சோஷலிசத் தமிழ்க் குடியரசு அமைய வேண்டும். இதுதான் தமிழரசுக் கழகத்தின் உயிர்

நாடியான கொள்கை. இந்தக் கொள்கைக்கு ஆக்கந் தேடவே தமிழரசு மாநாடு கூடுகிறது.

தமிழகப் பிரிவினை, தலைநகர் பாதுகாப்பு, குமரி—வேங்கடத்தை மீட்டல் ஆகியவையெல்லாம் மேற் சொன்ன சுதந்தர சோஷலிசத் தமிழ்க் குடியரசு அடைவதற்கான நடைமுறைத் திட்டங்களில் சிலவை யாகும்.

“எல்லைக் கிளர்ச்சியோடு நின்றுவிட்டா லென்ன?” என்று அறிவுரை கூறுகின்றனர் சிலர். எல்லைக் கிளர்ச்சி வெற்றி பெறுவதால் சில ஆயிரக் கணக்கான சதுர மைல்கள் தமிழகத்தோடு இணைக் கப்படலாம். தலைநகரமான சென்னை பாதுகாக்கப் படலாம். ஆனால் தமிழகத்தின் நிலப்பரப்பு பெருகி விடுவதனால் மட்டும் அதிலுள்ள மக்கள் வளத்துடன் வாழ்ந்துவிட முடியாது. தமிழகத்தின் வளத்தைப் பிற இனத்தார் சுரண்டிச் செல்லும் “பகற் கொள்ளை” போன்ற பாதகச் செயல்கள் தடுக்கப்பட வேண்டும். தமிழகத்தின் அரசியல் பிற இனத்தவ ரின் தலையீடின்றி நடைபெறவேண்டும். அதற்காகத் தான் நாம் சுதந்தரத் தமிழரசு—அதை அமைக்கும் சுய நிர்ணய உரிமை கோருகிறோம். நாம் சுதந்தரத் தமி ழரசு வேண்டுவது பிற இனத்தவர்மீது கொண்ட பகைமையினாலல்ல; நமக்குள்ள உரிமையினாலாகும்.

தமிழரசுக் கழகம் வேண்டுவது வெறும் சுதந் தரத் தமிழரசுமட்டுமல்ல; சுரண்டலுக்கு இடமற்ற சோஷலிசக் குடியரசுமாகும். ‘தமிழன்’ என்ற இன

உணர்ச்சியைமட்டும் எழுப்பி தமிழகத்தின் பண மூட்டைகள், பதவி வேட்டையாளர்கள் தலைமையின் கீழ் மக்களைத் திரட்டுவது கழகத்தின் கருத்தல்ல, சுதந்தரம் என்ற தூய்மையான உணர்ச்சியை ஊட்டி சோஷலிசம் என்ற சுகவாழ்வுக்குத் தமிழர்களை அழைத்துச்செல்லவே கழகம் பாடுபடுகிறது. அதனாற்றான், 'சுதந்தர—சோஷலிச—தமிழ்-குடியரசு' என்ற சொற்றொடரை ஒவ்வொரு கட்டத்திலும் ஒளிவு மறைவின்றி அழுத்தந் திருத்தமாக கழகம் வற்புறுத்தி வந்திருக்கிறது. சுருங்கச் சொன்னால், எந்தப் புதிய தமிழகத்தை உருவாக்க கழகம் பாடுபடுகிறதோ, அந்தப் புதிய தமிழகத்தில் சுரண்டல் கொள்கை எந்த உருவத்திலும் இல்லாது ஒழிக்கப்படவேண்டுமென்பதே தமிழரசுக்கழகத்தின் தலையாய கொள்கை.

'சோஷலிசம்' என்று சொல்லும்போது இடதுசாரிக் கட்சிகளிடையே தோன்றியுள்ள ஒன்றோடொன்று முரண்பட்ட பல்வேறு கருத்துக்கள் அல்லது தத்துவ விளக்கங்கள் நம்மைத் திகைக்க வைக்கின்றன. என்றாலும், தமிழரசுக் கழகத்தைப் பொருத்தவரையில் விஞ்ஞான ரீதியான சோஷலிசத்தை ஜனநாயக முறையில் கொண்டுவரவே விரும்புகிறது. ஆம், கழகம் வேண்டுவது 'ஜனநாயக சோஷலிசம்'. இந்தக் கொள்கையைத் தமிழரசுக் கழகம் தனித்து நின்றும், அவசியமானபோது பிற இடதுசாரிக் கட்சிகளோடு ஸ்தாபன ரீதியாக இணைந்து நின்றும் நிறைவேற்றவே விரும்புகிறது.

தமிழரசுக் கழகம் கடந்த ஓராண்டாக தனது கொள்கைக்கேற்ப மிகச் சிறந்த முறையில் பணியாற்றி வந்துள்ளது. குமரிமுதல் வேங்கடம் வரை உள்ள நிலப்பரப்பு முழுவதும் தனது கோரிக்கையை வெகுவாகப் பரப்பியுள்ளது. 'தமிழர்' 'தமிழ் நாடு' என்பதெல்லாம் 'குறுகிய புத்தி' எனக் குறை கூறியவர்களின் வட்டாரத்திலேயே, 'தமிழர் தனி இனம்'; 'தமிழகம் தனி நாடு'; 'தமிழகத்தில் தனியரசு'; 'தமிழருக்கும் சுயநிர்ணயம்' என்ற சுதந்தர ஒலிகளை எழுப்பிவந்தது; அவற்றை ஏற்கும்படியும் செய்து விட்டது.

தமிழ் மாகாணக் காங்கிரஸ் கமிட்டி.

தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி.

திருமங்கலம் தாலுக்கா காங்கிரஸ் மாநாடு.

தமிழ் எழுத்தாளர் மாநாடு.

தமிழாசிரியர் மாநாடு.

சென்னை மாகாணத் தமிழர் சங்க மாநாடு.

தமிழ்நாடு காங்கிரஸ் ஊழியர் மாநாடு.

சென்னை ஜில்லா காங்கிரஸ் ஊழியர் மாநாடு.

சென்னை கல்லூரிகள் மாணவர் மாநாடு.

ஆகிய பல்வேறு கமிட்டிகளும் மாநாடுகளும் தமிழரசுக் கழகக் கோரிக்கைகளை எதிரொலி செய்துள்ளன. குறைந்தகாலப் பிரசாரத்தில் கழகம்

அடைந்துள்ள மகத்தான வெற்றிக்கு இவையனைத்தும் தக்க சான்றுகளாகும்.

சென்னை அசெம்பிளி, மேல்சபை ஆகியவற்றில் மொழிவாரி மாகாணப் பிரிவினை பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அத்தீர்மானங்கள் மொழிவாரி மாகாணக் கிளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டதாக 'விடுதலை' வியாக்கியானம் செய்கிறது. கட்சிச் சுயநலம் அதிகப்பட்டு விட்டால் கருத்து குழம்பிவிடும் என்பதற்கு இதுவே தக்கசான்று.

சட்டசபைத் தீர்மானம் மாகாணப் பிரிவினையை வற்புறுத்தியதே யொழிய மாகாண எல்லைகள் இதுவென விளக்கவில்லை. மேலும் மாகாணப் பிரிவினை வேண்டுமென்று அரசியல் நிர்ணய சபைக்கு வேண்டுகோள் அனுப்பியதே ஒழிய இத்தனை மாதங்களுக்குள் பிரித்தாகவேண்டுமென்று அ. நி. மன்றத்திற்கு ஆணை பிறப்பிக்கவில்லை; பிறப்பிக்கவும் முடியாது. எனவே, வெறும்வேண்டுகோள்அனுப்பியதினாலேயே மாகாணப் பிரிவினை உடனடியாக ஏற்பட்டுவிடுமென்றோ குமரி - வேங்கட நிலப்பரப்பில் சோவியத் குடியரசு அமைந்து விடுமென்றோ நம்புமளவுக்கு தமிழரசுக் கழகத்தின் அரசியல் ஞானம் மட்டரகமானதல்ல. மேலும், சென்னை சட்டசபையினர் மாகாணப் பிரிவினையில் மட்டும் அக்கரை காட்டினரே யொழிய, பிரிக்கப்பட்ட மாகாணங்களின் அரசியல், பொருளாதார சுதந்தரங்களைப்பற்றிச் சிந்திக்கவே இல்லை. எனவே, தமிழரசுக் கழகம்

இனியும் தனது கொள்கையை நாட்டில் பரப்ப வேண்டுவது அவசியமும் அவசரமும் ஆகும்.

இம்மாநாடு தமிழினத்தின் வரலாற்றிலேயே புதுமை வாய்ந்தது; புரட்சிகரமானது. தமிழின் பெயரால் தமிழர் பெயரால் கூடிய மாநாடுகள் எத்தனையோ உண்டு. அவற்ருல் பல நன்மைகளும் விளைந்ததுண்டு. ஆனுல், இன உணர்ச்சியின் அடிப்படையில், உரிமைக்கு வேங்கடத்தை எல்லையாக்கி, உறவுக்கு இமயம்வரை செல்வோமென உறுதி கூறி, சுதந்தரம்—சுயநிர்ணயம்—சோஷலிசம் என்ற கோஷங்களைக் கிளப்பும் முதல் மாநாடு இதுவேயாகும். அதுமட்டுமல்ல; காலத்தையொட்டியும், கடந்தகால சுதந்தரப் போரில் கடமையைச் செய்தவர்களாலும் இந்த உரிமைக் கோஷங்கள் எழுப்பப்படுவதால் நாட்டில் உள்ள முற்போக்குச்சக்திகளின் ஆதரவு நாளுக்கு நாள் பெருகி வந்துள்ளது. கடந்த சில மாதங்களுக்குள் தமிழரசுக் கழகம் பல அரிய பணிகளைச் செய்ய முடிந்ததற்கும் இந்த முற்போக்கு சக்திகளின் துணையே முதற் காரணம். எனவே தமிழரசு மாநாடு கட்சி மாநாடே என்ருலும் அதன் நடவடிக்கைகளும் தீர்மானங்களும், முற்போக்குச் சக்திகளின் ஆதரவைப் பெறும் வகையில் அமையவேண்டும்.

சாதிப் பாகுபாட்டில் நம்பிக்கையற்றது தமிழரசுக் கழகம். சமூக வாழ்வைச் சீர்குலைக்கும் வகையில் உள்ள சமயக்கொள்கைகளையும் கழகம் எப்போதும் ஏற்றதில்லை; இனி ஏற்கப்போவதுமில்லை.

எனவே, தமிழரசு மாநாடு அரசியல்-பொருளாதார உரிமைகளை அடைய வழிகாட்டுவதோடு நில்லாது, சாதி, சமயம், சாத்திரம் என்ற பெயரால் நடந்து வரும் சதிச்செயல்களை, சமூக ஊழல்களை ஒழிக்கவும் திட்டமிட வேண்டும்.

அரசியல் நிர்ணய மன்றத்தார் தயாரித்துள்ள புதிய அரசியலானது கடந்தகால ஏகாதிபத்திய இந்தியாவில் அமுலிலிருந்த அரசியலின் நகல் போன்றதாகும். ஆங்கில ஆதிக்கம் அகன்றதும், வயதுவந்தோருக்கு வாக்குரிமை தந்ததும் தவிர வேறு புதிய அம்சங்கள் அதில் ஒன்றுமில்லை. இத்தகைய பிற்போக்கான அரசியல் தமிழர் மீது திணிக்கப்படுமானல் தமிழர் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் பிரதிநிதிகள் முடிவு செய்தாக வேண்டும்.

பொதுவாக, தமிழரசுக்கழகம் கடந்த ஓராண்டில் பெற்ற ஆற்றலையும் ஆதரவையும் அனுபவத்தையும் வைத்துக்கொண்டு வருங்காலத்தில் மேற்கொண்டு முன்னேறுவதற்கான திட்டங்களை மாநாடு வகுக்குமென்று நம்புகின்றோம்.

தமிழரின் மூன்று கோரிக்கைகள்

சுதந்திரம் - சுயநிர்ணயம் - சோஷியலிசம்

நற்செய்தி

'தமிழ் முரசு' கடந்த பதினெட்டுத் திங்களாக நூல் வடிவிலும் பத்திரிகை வடிவிலும் ஆற்றிவந்த பணியை அனைவரும் அறிவர். இன்றையப் பத்திரிகை உலகைப் பின்பற்றி காட்சிக்குரிய படங்களோ, காலத்தைப் போக்கும் கதைகளோ 'முரசி'ல் அதிகம் இடம் பெற்றதில்லை. அவை 'முரசி'ன் குறிக்கோளு மன்று. வீழ்ந்த தமிழகத்துக்கு விடுதலை தேடி, தாழ்ந்த தமிழினத்தை தலை நிமிரச் செய்து தன் மான வாழ்வு நடாத்த வழி செய்யவே 'தமிழ் முரசு' தோன்றியது. அந்த வகையில் தமிழினத்தின் பண்டைய சிறப்பு—இன்றைய சீரழிவு அனைத்தையும் சித்தரிக்கும் கட்டுரைகளை - கவிதைகளை வாசகர்களுக்கு 'முரசு' வரையாது வழங்கி வருகின்றது. மற்றும், தமிழரைச்சுற்றி தமிழர் எனப்படுவோரால் செய்யப் படும் சீர்குலைவுச் செயல்களை அவ்வப்போது அம்பலப் படுத்தி அழுத்தந் திருத்தமாகக் கண்டித்து வந்திருக்கிறது. 'தமிழ் முரசி'ன் இந்த நல்ல பணிகளைத் தமிழ் நாட்டார் இதுவரை ஆதரித்து வந்துள்ளனர். இனியும் ஆதரிக்கப் போகின்றனர் என்பதில் ஐயமில்லை. 'முரசி'ன் கடந்த கால வளர்ச்சியே இதற்கு அறிகுறியாகும்.

ஆனால், வாசகர்களுக்கு 'முரசி'ன்பால் சில குறைகள் உண்டு என்பதை நாம் அறியாமலில்லை. குறித்த

தேதியில் 'முரசு' வெளிவர முடிவதில்லை. இது முதற் குறை. சொந்த அச்சகமின்மையே இக்குறைக்குக் காரணம்.

'முரசு' அதிகப் பக்கங்களுடன் வெளிவர வேண்டுமென்று சிலர் விரும்புகின்றனர். இதுவும் நியாயமானதே என்றாலும், 'முரசு' வறுமைக் குடியில் தோன்றி, விளம்பர வருமானத்தை நாடாது வெளிவருகின்றது. எனவே, விலையை உயர்த்தாது பக்கங்களை அதிகப்படுத்துவது இயலாததாயிற்று.

மற்றும் 'முரசு' வாரப் பத்திரிகையாக வளர்ச்சி பெறவேண்டுமென்பது வாசகர்களின் ஒருமனதான கோரிக்கை. நாமும் அதை உணர்கிறோம். மேலும் 'தமிழரசுக் கழகம்' வளர்ச்சி பெற்று வருவதால், இயக்கச் செய்திகளை அதிகமாகவும் விரைவாகவும் வெளியிட வேண்டியிருக்கிறது. இனியும், 'முரசு' வாரப் பதிப்பாக வெளிவராவிடில் இயக்கத்தைச் சுற்றி வளரும் ஐயங்களை அவ்வப்போது போக்குவதும் மக்களிடையே விறுவிடுக்கு விறுவிடு வளர்ந்துவரும் இன உணர்ச்சியை இயக்கத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதும் முடியாது போய்விடும் என அன்பர்கள் அஞ்சுவதும் இயற்கையேயாகும்.

எனவே, 'முரசு' மிக விரைவில் வாரப் பதிப்பாக வெளி வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்பதையும், அதற்கிடையில் வெளிவரும் மாதம் இரு முறை 'முரசு'ம், கூடுமானவரை அதிகப்

பக்கங்களுடன் குறித்த தேதியில் வெளிவரும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

'முரசு' வாசகர்களின் குறைகள் முற்றும் பூர்த்தி செய்ய முடிந்ததற்கு மகிழ்ச்சி யடைகிறோம்.

அட்டைப்பட விளக்கம்

இந்த, 'முரசு' அட்டைப் படத்தில் வீடில்லாத ஏழைக் குடும்பங்கள் சில சென்னை 'பர்மா ஷெல்' கட்டிடத்தருகில் வாழும் காட்சி. ஆம், வானத்தைக் கூரையாகவும் மானத்தைச் சுவராகவும் எண்ணி வாழாது வாழும—சாக மனமின்றி சாக்கடை யோரத்தில் வாழும் குடும்பங்கள். உண்பதும் அங்கே. உறங்குவதும் அங்கே. மங்கல விழாவும் மரணச் சடங்கும் அந்த சாக்கடை ஓரத்தில்தான். இரண்டொரு சட்டி, பானைகள், அம்மி என்ற பெயரால் வீதியில் கண்டெடுத்த இரண்டுகற்கள். இன்னும் இதுபோன்ற ஒரு காசுக்கும் விலை போகாத கருவிகள் சில; இவைகள்தான் இந்தக் குடும்பத்தின் சொத்துக்கள். ஒருபுறம் வானளாவ ஓங்கிய 'பர்மா ஷெல்' கட்டிடம். மற்றொருபுறம் வீடின்றி வேதனைப் படும் ஏழைக் குடும்பம். பெய்யும் மழையால்-அடிக்கும் காற்றால்— தகிக்கும் வெய்யிலால் அவர்கள் படும் தொல்லை சொல்லிமுடியாது. நாகரீகம் வாய்ந்த நகரத்தின் நடுவில், தமிழகத்தின் தலை நகரில் ஏழைத் தமிழர் குடும்பங்கள் வாழும் நிலை இது. அரசாங்கக் காரியாலயம் அருகிலிருக்கிறது, சென்னை நீதி மன்றமும் இவர்கள் வாழுமிடத்திற்கு நேரே இருக்கிறது. இருந்தும் பயனென்ன ?

தமிழரசு (கிளை)க் கழகங்கள்

திருச்சி நகரம்: தலைவர்: செ. மு. அ. பாலசுப்பிரமணியம், துணைத்தலைவர்: ஹார்து பீட்டர் எம்.ஏ.: பி.எல்., செயலாளர்கள்; சோ. சூரியமூர்த்தி, பி.ஏ., பி.எல்.; வே. முருகேசன், பி.ஏ., பொருளாளர்: ம. வேலாயுதம்.

உறுப்பினர்: வித்துவான் கோ. இரத்தினசாமி, மு. குருசாமி, வே. குஞ்சிதபாதம், ரெ. கோவிந்தராசு, துரைராசு, ம. கோவிந்தசாமி,

குமாரபாளையம்: கடந்த 2-10-47-ல் சரசுவதி வித்யாலயத்தில் அவ்வூர் அகில பாரத சங்கத்தின் கூட்டம் திரு. சி. இராமசாமி தலைமையில் கூடியது. அவ்வமயம், **அகில பாரத சங்கத்தை தமிழரசுக் கழக**மாக மாற்றிக்கொண்டு சென்னையிலுள்ள தலைமைத் தமிழரசுக் கழகத்துடன் இணைத்துக்கொள்வதென தீர்மானிக்கப்பட்டு பின் வரும் செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: ஆ. நா. நடராசன்; துணைத்தலைவர்: ஊ. ரா. ச. பழனியப்பன்; செயலாளர்கள்: ந. கிருஷ்ணசாமி, ல. ப. கு. இராமசாமி, பொருளாளர்: க. ப. சண்முகவேலு.

உறுப்பினர்: கே. சி. மு. அர்த்தநாரி, சி. அர்த்தநாரிசாமி, ஆர். பெருமாள்சாமி, கு. சு. நாகரத்தினம், கு. சி. நடராசன் ரா. இராமசாமி.

கோடந்தூர் கிராமம்: தலைவர்: பெ. முத்துச்சாமி, துணைத் தலைவர்: ந. கந்தசாமி, செயலாளர்: நா. குஞ்சரம்; துணைச் செயலாளர்: சு. கந்தசாமி; பொருளாளர்: இ. அருணாசலம்.

உறுப்பினர்: மூ. பொன்னப்பன், சி. சவுண்டப்பன், ப. தெய்வசிகாமணி, ச. சவுண்டப்பன், சி. தெய்வசிகாமணி, கோ. ச. இராமசாமி, செ. நல்லசாமி, ப. பழனிச்சாமி, சி. திருமலைச்சாமி, செ. அரங்கசாமி.

புதுக்கோட்டை சமஸ்தானம்: தலைவர்: சொ. கிருஷ்ணமூர்த்தி; செயலாளர்கள்: க. நாராயணன், சு. நடராசன், பொருளாளர்: ஆ. பழ. சேஷப்பன்.

உறுப்பினர்கள்: கு. மா. பாலசுப்பிரமணியம். இராஜேசுவரன், நா. ஆண்டியப்பன், சித. கருப்பையா, பழ. சுந்தரேசன். வெ. கதிரேசன், எஸ். வி. இராமாச்சாரி. சொ. அருணாசலம், கே. வி. சுப்பையா.

பள்ளத்தூர் கிராமம்: தலைவர்: பழ. சுப்பையா; துணைத்தலைவர்: சொ. சி. குமரப்பன். செயலாளர்: மு. மெய்யப்பன், சி. லெட்சுமணன், பொருளாளர்: அழ. சொ. சோலையப்பன்.

உறுப்பினர்: நாகூர் கனி, கணபதி, சபாபதி, லெ. சுப்பையா, பெரி. பெரியணன், சுப. அருணாசலம்.

பொள்ளாச்சி: தலைவர் பழ. இராமசாமி; துணைத் தலைவர்: ஆ. முத்துசாமி; செயலாளர்: மா. கருப்புச்சாமி துணைச் செயலாளர்; ப. இரங்கசாமி; பொருட்காப்பாளர்: மு, நாச்சிமுத்து. உறுப்பினர்: க. நடராசு, ரா ராசு, ப. கருப்புச்சாமி; க. மயில்சாமி, ப. சுப்பையன்; கி. நடராசு, கொ. மயில்சாமி மு. ஆறுமுகம், ப. வேலுச்சாமி, கொ. இராமசாமி

ஈரோடு: தலைவர்: ஈ. க. முத்துக்குமாரசாமி; பொதுச் செயலாளர்: ஈ. கு. அண்ணாமலை; கூட்டுச் செயலாளாகள்: கு. மாணிக்கம்; சி. முத்து, பொருளாளர்: சு. பொ. மாணிக்கம், செயற்குழு உறுப்பினர்; ஈ. கு. விவேகானந்தம்; வீ. கு. தியாகராசன்; சி. பெ சின்னுசாமி; ப. வையாபுரி.

மணலி: தலைவர்: ப. நாராயணன்; துணைத்தலைவர்: ரெ. வைத்தியலிங்கம், செயலாளர்: தி. கோ. சாமி; துணைச்செயலாளர்: மு. குஞ்சிதபாதம்; பொருளாளர்: அழ. இராமநாதன்; செயற்குழு உறுப்பினர்; த. ரங்கநாதன்; ரா. சாமிநாதன்; ப. ஜெகதீசன; சி. பசுபதி; வி. பிரகாசம்; சே. சுல்தான் கனி; சே. மீரா உசேன்; ப. சீ. தேவராஜ்: ச, சொக்கலிங்கம்; ப. வெங்கடாசலம்.

சித்தூர்; திரு. சே. அரங்கநாத முதலியார், பி.ஏ., பி.எல்; துணைத்தலைவர்; எம். வி. டி. பத்தர்; செயலாளர்: அ. முனுசாமி பிள்ளை; பொருளாளர்: ஓ. எம். இராஜவேல் முதலியார்; செயற்குழு உறுப்பினர்: இ. மோகனவேல் செட்டியார்; ஆசிரியர் ஆறுமுக முதலியார்; சாந்தானந்த சுவாமிகள்; சச்சிதானந்த முதலியார்: பால சுந்தர முதலியார்; சுப்பிரமணிய நாட்டார்; நாராயணசாமி பிள்ளை; வேணுகோபால் நாயக்கர்.

வெண்ணிலா

விலை ஒரு அணா

(மாத மிருமுறை)

ஆணித்தரமான அரசியல் கட்டுரைகள், சரித்திர வரலாறுகள், பண்டை நூல் ஆராய்ச்சிக் கட்டுரைகள், கவிதைகளைப் பெற்று, 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கத்துடன் வெளி வருகிறது.

விற்பனையாளருக்கு :

ரூபாய் 5 அனுப்பி, விற்பனையாளர் உரிமையைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். மாதா மாதம் தேவையான பிரதிகளுக்கு 25% கழிவு நீக்கி முன்பணம் அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

விவரங்கட்கு:

வெண்ணிலா அலுவலகம்,

22, கந்தப்ப முதலியார் தெரு,

புதுச்சேரி.

தமிழரசுக் கழக மாநாடு

பிரதிநிதிகளுக்கு அறிவிப்பு

வரவேற்புக் குழுத் தலைவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் எழுதுகிறார்: —

9-11-47 ஞாயிற்றுக் கிழமையன்று தமிழரசுக் கழக மாநாடு நடைபெறும். (அதுபற்றிய விவரம் மற்றொரு பக்கத்தில் காணலாம்).

அம் மாநாட்டிற்கென கிளைக் கழகங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும், தலைமைக் கழகத்தினரால் நியமிக்கப்பட்டுள்ள பிரதிநிதிகளும், தவறாமல் வரக் கோருகிறேன். மாநாடு ஒரேநாள்தான் நடைபெறும். பிரதிநிதிகள் எந்த ரயிலில் வருகிறார்கள் என்பதை முன்னதாகவே எழுதும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பிரதிநிதிகள் மாநாட்டிற்குக் கொண்டுவர இருக்கும் தீர்மானங்களையும், பிரதிநிதிகளின் கட்டணத்தையும் 5-ந் தேதிக்குள் அனுப்பி வைக்கவேண்டும்.

கிளைக் கழகங்கள் ஒவ்வொன்றும் இரு பிரதிநிதிகள் வீதம் தேர்ந்தனுப்புமாறு அழைப்பு அனுப்பி இருக்கிறோம். தவறுதலாக அந்த அறிக்கை எந்தக் கழகத்துக்கேனும் கிடைக்காதிருந்தால் இதைக்கண்ட பின்னரேனும் தாமதிக்காது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, அவரது விலாசத்தைக் கட்டணத்துடன் சேர்த்தனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழன் திருநாள்

கோ. மோ. ஜனார்த்தனம்
[தமிழரசுக் கழகச் செயலாளர்]

தமிழகத்திலே சிறப்பு நாட்கள் என்ற பெயரால் எத்தனையோ விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. ஆனால் அவையனைத்தும் தமிழருக்குரிய திருவிழாவாக ஆவதில்லை. ஒரு சில விழாக்கள்தான் தமிழரின் உள்ளத்தைக் கவர்ந்து உணர்ச்சியூட்டும் விழாக்களாக இருக்கின்றன. அவற்றில் ஒன்று இந்திய விடுதலைப் போரின் தமிழகத் தளபதி வ. உ. சிதம்பரம் அவர்களின் மறைவு நாளாகும். மனித உடல் என்றும் மறைதற் குரியதே. எனவே, வ. உ. சி. யின் மறைவு நாள் தமிழருக்கு துக்க நாளல்ல; அவர் தமது வாழ்வில் நடத்திய வீரப் புரட்சியை நினைவூட்டும் திருநாளாகும். அதிலும் சுதந்தரத்திற்காகப் பாடுபட்ட அப் பெருமானின் திருநாள் சுதந்தர இந்தியாவில் இப்போது தான் முதன்முதலாக வருகிறது. அந்நாள் நவம்பர் பதினெட்டாம் நாள் ஆகும்.

"கோனாட்சி நீக்கிக் குடியாட்சி ஏற்படுத்தி நானாட்சி செய்வேன்" என்று முழங்கினார் அவ்வீரர். ஆம்; பிரிட்டிஷ் கோனாட்சி தொலைந்துவிட்டது உண்மை; ஆனால் அவர் விரும்பிய தமிழ்க் குடியாட்சி ஏற்படவில்லை. அந்தக் குடியாட்சிக் கோரிக்கைப் போர் குமரிமுதல் வேங்கடம் வரை உருவாகி வருகிறது. இந்த நேரத்தில் சிதம்பரனாரின்

திருநாளை நமது வருங்கால வாழ்விற்கு வழிகாட்டும் பெரு நாளாகக் கொண்டாடும்படி தமிழ் இனத்தாரைத் தாழ்மை யுடன் வேண்டுகின்றோம். சிதம்பரனார் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்ட தேசிய வாதி; உழைப்பாளி மக்க ளின் உரிமைக்குப் போராடிய உத்தமர்; பல்கலை யுணர்ந்த பாவலர்; சீர்திருத்தச் சிந்தையாளர். எனவே—தேசியவாதி கள், பொருளாதாரப் புரட்சியாளர்கள், தமிழ் அறிஞர்கள், சீர்திருத்த வாதிகள் அனைவரும் அவரது விழாவில் பங்கு கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

நவம்பர் 18 முதல் 24-ந்தேதி வரையுள்ள ஏழு நாட்களை வ. உ. சி. வாரம் என்ற பெயரால் கொண்டாடுவதென தமிழரசுக் கழகத்தார் தீர்மானித்துள்ளனர். தமிழக மெங்குமுள்ள தமிழரசுக் கழகக் கிளைகள் இவ் வாரத்தைச் சிறப் புறக் கொண்டாட ஏற்பாடு செய்யுமாறு வேண்டு கின்றேன்.

தமிழ் மக்களுக்கு இன்னொரு வேண்டுகோள். ஆங்கி லேயன் தமிழகத்தில் முதல் முதல் புகுந்தது சென்னை நகரில்தான். நமது பிற்கால அல்லல்களுக்கெல்லாம் காரண மாக விருந்த அவ்வன்னியர் முதலில் கால்வைத்த இடம் 'ஜார்ஜ் டவுன்' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. 'ஜார்ஜ்' இனத்தின் ஆட்சி அகன்ற பின்னரும் அவரது பெயரால் தமிழகத் தலைநகரின் சிறப்பு வாய்ந்த பகுதியை அழைப்பது மானங்கெட்ட செயலாகும். எனவே அப் பெயரைத் தொலைத்து வேறொரு பெயரை வைக்குமாறு தமிழ் மக்கள் கிளர்ச்சி செய்யவேண்டும். மாற்றுப் பெயர்

எதுவென்று மயங்கத் தேவையில்லை. தமிழகத்தில் சுதந்தரப் போரைத் துவக்கிவைத்த முதல் வீரரான வ. உ. சி. யின் நினைவுக்கு அறிகுறியாக 'சிதம்பரம் நகர்' என்று பெயர் வைக்கலாம். மேலும் அந்தப் பகுதியில்தான் தமிழகத்தின் பெரிய துறைமுகம் இருக்கின்றது. 'கப்பலோட்டிய தமிழர்' எனத் தமது செயலால் சிறப்புப்பெயர் பெற்ற சிதம்பரனாரின் பெயரை வைப்பதே மிக மிகப் பொருத்தம்.

திரு. ம. பொ. சி. சென்னைக் கல்லூரிகள் தமிழ் இன மாணவர் மாநாட்டில் இந்தக் கருத்தை வெளியிட்ட பின்னர் தமிழகமெங்கும் ஆதரவு பெருகிவருகிறது. சென்னைத் துறைமுகத் தொழிலாளர் சங்கமும் இதை ஆதரித்துத் தீர்மானம் செய்துள்ளது.

வ. உ. சி. வாரத்தில் தமிழகமெங்கும் கூட்டங்கள் கூட்டி 'ஜார்ஜ் டவுனைச் சிதம்பரம் நகராக மாற்றுங்கள்' எனத் தீர்மானம் செய்து சென்னை மேயருக்கும், சென்னை அரசாங்க தலைமை அமைச்சருக்கும் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். வாழ்க வ. உ. சி. நாமம்.

மலர் அன்பு

புத்தனேரி, ரா சுப்பிரமணியன்

வண்டு

கண்ணைக் கவரும் நறுமலரைக்
காத லிப்பார் மிகப்பலரே !
வண்ண மலரின் மதுவுண்டு
மகிழச் சுழலும் பொன்வண்டு.

காதலன்

புதுமைப் பூவின் இதழ்காட்டிப்
பூவை மனதில் உணர்வூட்டி
அதரம் இதழைச் சுவைத்திடுவான்
அன்பன் அவளை அணைத்திடுவான்.

காதலி

வள்ளி நல்லாள் மணமலரும்
மனதிற் குகந்தான் ஆருயிரும்
அள்ளிக் குழலிற் செருகிடுவாள் ;
அழியா இன்பம் பருகிடுவாள் !

கைம்பெண்

வாழ்வை இழந்த கைம்பெண்ணுள்
மலரைக் காணின் மனம்புண்ணும் ;
பாழும் சமூகத் தடையதனுல்
பரமன் சிலையில் அதையணிவாள்.

பூக்காரி

அலைந்து தேடி மலரெடுத்தே
அலங்கல், சரமாய்ப் பலதொடுத்து
நலிந்து விற்கும் பூக்காரி
நல்குர வன்றோ ஏற்கின்றாள் ?

பெருமைக்காரன்

மின்னும் பெருமை நினைந்திடுவோன்
மிளிரும் மாலை தனை யேந்தி
மன்னர் செல்வத் துரைமாரை
வளைவான் ; முறுவல் வரவேற்பான் !

செல்வர்

குவியும் செல்வர் மாலை பல
கோவிற் சாமிக் கணிசெய்வார்,
கவலை யின்றிப் பட்டரவர்
களிக்கும் முறையை உரைக்கின்றேன் !

கோவில் பட்டர்

சூடிக்களைந்த மாலையினைச்
'சொக்கர் அருட்பிர சாத'மென
மூடிக் கொணர்வார் அன்பரிடம்
முடிந்தமட்டும் பணம்பெறுவார் !

மழலையரும் மந்தியும்

பலவகைப் பூவில் நிறத்தினிலே
பதியும் பாலர் சிறப்புள்ளம்;
மலரின் மாலை மந்தியிடம்
வாய்த்தால் துகளாய்ச் சிந்திவிடும்!

மலரின் ஆவல்...?

நறுமல ருக்கிம் முறைகளினால்
நனிமகிழ் வென்றும் பிறவாதே!
கறையறு வீரர், புகழணியாய்க்
கழுத்திற் புரளின் மகிழ்வுறுமே!

PIMPLE Cure

அசிங்கமான முகப்பருக்கள் முகத்தின் சௌந்தரியத்தை பாழ்படுத்தி விடும். சுவாதியின் முகப்பரு நிவாரணியால் சருமத்திலுள்ள பரு, கருப்பு புள்ளிகள், முதலிய படைகளை அகற்றி இயற்கை அழகை மீண்டும் பெறுங்கள்

SWATHI PRODUCTS, LTD.
MADRAS.

தென் இந்தியாவிற்கு பிரதம ஏஜண்டுகள் :—

ஏர். ஸ்டீபெர் & ஜெனரல் ஏஜென்ஸீஸ் லிமிடெட், சென்னை.

சென்னை நாகரீகம்.

தே. போ. மீனாட்சி சுந்தரனார்

மாலையிற் கதிரவன் மேற்கே மஞ்சளாய்ப் பைம்பொன்உருண்டையாய் உருண்டு, செக்கச் சிவந்து வான முழுதும் செவ்வொளியில் மூழ்கிக் களிக்க மெல்ல மெல்ல மறைகின்றான். உயிர்களுக் கெல்லாம் ஓய்வு பிறக்கின்றது. இவர்களைக் கண்டு இன்பச் சிரிப்புப் பூப்பது போல வான்மீன்கள் ஒவ்வொன்றாக அங்கும் இங்கும் தலை காட்டி வானக முழுதும் நெருங்கி நிற்கின்றன. " ஓம் ஓம் ஓம் " என்ற ஒலி விட்டு விட்டுத் தொடர்ந்து இன்ப இசை ஒலியாகப் பாடுகின்றது. இது ஒரு மணி ஒலிதான். ஒலி வரும் வழியே திரும்பிப் பார்த்தால் பெரியதொரு கோபுரம் வானகத்திற்கு ஏறுவதற்கமைத்த படிக்கட்டு போல ஓங்கித் தோன்றுகிறது. அந்த எழுநிலை மாடத்தை நோக்கிப் போகின்றோம். கோட்டைபோன்றதொரு கோவிலின் வாயிலாக அக்கோபுரம் விளங்குகிறது. மக்களைக் காணோம். துரிஞ்சிலும் வௌவாலும் கோபுரத்தில் குடிபுகுந்து கழுகிலிட்டாற்போலத்தொங்குகின்றன. ஓரே இருள். புறத்தே இருந்த அழகிய இயற்கையும் இருண்டது. இந்தக் காட்சியைப் பொறுக்கமாட்டாமல் வான் மீன்கள் கண்ணை மூடி மூடித் திறப்பதுபோல் மின்னுகின்றன.

முன்னொரு காலத்தில் வாழ்ந்த இடமே இன்று பாழாகிக் கிடக்கின்றது எனத் தெரிகிறது. கோபுரத்தின்மேல் ஏறினால் எழுநிலை மாடத்தில் ஒவ்வொரு அடுக்கிலும் தூண்களே இல்லாத பெரிய மண்டபத்தில் நான்கு புறத்திலும் காற்றுக் கலந்து வீசுகின்ற அழகினையும் இனிமையினையும் என்னென்பது! உலகத் துன்பங்களை எல்லாம் மறந்து வானுலகத்திற் புகுந்ததுபோன்ற மகிழ்ச்சி மனத்தில் பொங்கி வழிகின்றது. இத்தகைய கோபுரத்தில் இருந்துதான் 'இராமானுஜர்' "எனக்கு நரகம் வந்தாலும் இந்த உலக மக்கள் எல்லாம் என்றும் இன்ப வாழ்வு வாழ முயல்வேன்" என்று துள்ளி எழுந்த துணிவு நினைவிற்கு வருகிறது. அந்தத் துணிவின் வழியே நாடுகளில் எல்லாம்

சென்று தொண்டின் பெருமையையே கடவுள் வழிபாட்டின் உண்மை வடிவம் எனப் பேசித் தீண்டாதாரைக் கோவில்களுக்குள் புக விட்டுத் தமிழ்ப் பாட்டே எங்கும் பாடி ஆட முயன்ற முயற்சிகள் கண் எதிரே தோன்றுகின்றன. எல்லாம் பழங்கதையாகி மறைந்தனவே என மனம் வாடி வதங்குகிறது. இத்தகைய கோபுரத்திலிருந்து அருணகிரியார் கிளிபோலக் கவலையற்றுத் திருப்புகழ் பாடியதும் நினைவிற்கு வருகிறது. ஆம், ஒரு காலத்தில் இந்தக் கோபுர மாடங்களில் கற்றவர் வாழ்ந்து கலைகளைப் பயிற்றி வந்தனர். இன்றும் இவை ஒவ்வொன்றும் ஒரு கல்லூரியாகலாம். மின்சாரத் தூக்கி (Lift) ஒன்று அமைத்தால் மேலே ஏறுவதும் இறங்குவதும் எளிதாகும் எனக் கனவு காணும்போது அங்குப் புதிய திட்டப்படி மின்சார விளக்குகள் மின்னிப் பொலிவதனையும் மனக்கண்ணால் காண்கின்றோம்.

கோபுரத்திலிருந்து கீழிறங்கிக் கோவிலுக்குள் சென்றால் பெரிய பெரிய மண்டபங்கள். நாலுகால் மண்டபம், பதினறுகால் மண்டபம், நூறுகால் மண்டபம்! ஆயிரங்கால் மண்டபம் எத்தனை எத்தனை, ஏன் இவற்றினை வீணுகக் கட்டினார்கள்? வெறியர்களா? என்று உள்ளிருந்து உரத்த குரலில் கேள்வி எழுகிறது. "இத்தகைய மண்டபத்தில் தான்சேக்கிழார் பெரியபுராணம் அரங்கேற்றினார். கம்பர் இராமாயணத்தினை அரங்கேற்றினார். ஆசிரியன்மார் பல பல விளக்கங்களைக் கூறி வந்தனர்" என என்னுடைய நினைவு விடை கூறுகின்றது. முதியோர் கல்வி, இளையோர் கல்வி, பெண்கள் கல்வி எல்லாம் இந்த மண்டபங்களில் நடந்தேறி வந்தன. 'எழுத்தறியு மண்டபம்' என ஒன்று திருவொற்றியூரில் இருக்கின்றது. அந்த மண்டபத்தில் வீற்றிருப்பவரே இராமலிங்க அடிகள்; பாடும் எழுத்தறியும் பெருமான். இங்கு இலக்கண வகுப்புகள் நிகழ்ந்தன. பலவகைத் துறைகளில் மக்கள் இங்குப் புகுந்து கற்றனர். கடவுளை இல்லை என்கிற பூருவ மீமாஞ்சை நூல்களையும், கடவுள் எதிரேயே கற்று ஆராய்ந்தார்கள். பரந்த நோக்கம் அந்த நாளில் இருந்த நிலைமை

அது. இசைப் பாடல்கள் பாடினார்கள். 'சர்வ சங்கீத வாத்ய மண்டபம்' என எல்லா இன்னிசைக் கருவிகளும் முழங்கும் மன்றங்களும் உண்டு. ஆவுடையார் கோயிலில் இன்றும் இருந்து வருவது நினைவிற்கு வருகிறது. அரையர்கள் இசைப் பாட்டினைப் பொருள் விளங்குமாறு அபிநயம் பிடித்துக் கூத்தாடிக் காட்டுவதற்கு இராமானுசர் முதலானோர் பெரிதும் முயன்ற பெருங்கதையும் மனத்திற்கு வருகிறது. கோயிலே உண்மையிற் பல்கலைக்கழகமாக அந்த நாளில் விளங்கியது.

அது மட்டுமா? இந்த மண்டபங்களில்தான் ஊரினை ஆளும் ஊராளும் கணத்தாரைத் தேர்ந்தெடுத்தார்கள். குடத்தில் ஊரார் பெயர்களை எல்லாம் தனித்தனியே ஒவ்வொரு பனையோலை நறுக்கில் எழுதியிட்டுச் சிறுவனொருவனை அனைவர் எதிரிலும் குடத்தில் கையிட்டு ஒரு நறுக்கை எடுத்துத் தரச் சொல்லுவார்கள். அந்த நறுக்கில் எழுதியுள்ள பெயர் வழியே ஊராளும் கணத்தவராவார். 'எல்லாரும் ஓர் நிறை' என்பதனை ஒட்டிய தேர்தல் முறை அது. பஞ்சாயத்தார் என்ற வாரியத்தார் கூடி ஊராளும் வேலைகளைப் பார்ப்பதும் அந்த மண்டபங்களில்தான். பல பல சாதியினரும் பல பல தொழிலினரும் தங்கள் தங்கள் குழுவினைப்பற்றியவற்றினை ஆராய்வதும் அங்குக் கூடித்தான். ஊராளும் கணத்தாரின் பணியிருப்பது அங்குதான். அரசர்கள் கட்டளையைக் கல்லில் அடித்து வைப்பதும் அங்குதான்,

'ஏழை பங்காளன்' எனக் கடவுளுக்கு ஒரு பெயர் வந்தது இத்தகைய கோவில்களால்தான். நோயாளர்களுக்கு மருந்து கொடுக்கவும் படுகிடையாகக் கிடப்பார்க்கு உணவு முதலியன உதவும் ஏற்பாடுகள் உண்டு. இவர்களை அன்போடு காப்பாற்ற இன்று 'நர்சுகள்' என்று சொல்வதுபோன்ற பணிப்பெண்களும் இருந்தனர். வேலை செய்ய முடியாமல் குருடும் முடமுமாய் இருப்பவர்க்கு அந்த நாளில் செய்திருந்த ஏழை ஒழிப்புத் திட்டம் மிக அழகியது. கையில்லா முடவன் தேவாரம் முதலிய பாடல்களைப் பாடக் கண்ணில்லாத

குருடன் மத்தளங்கொட்டிக் கோயிலோடு கோயிலாய் வாழ்ந்தினிதே வரக்கூடும். ஊரார் அனைவரும் ஓய்வு காலங்களில் கண்டு களிக்கத் திருவிழாக்கள் நிகழும். அந்தத் திருவிழாக்களில் குறவஞ்சி முதலிய நாடகங்களைக் கண்டு மக்கள் களிப்பார்கள். அன்னாபிஷேகம், பாலாபிஷேகம் என்பன எல்லாம் ஏழைப் பிள்ளைகளுக்குப் பால் உதவவும், திக்கற்றாருக்குச் சோறு கொடுக்கவும் எழுந்த ஏற்பாடு களேயாம்.

இவை எல்லாம் நாம் காண்கின்ற இன்பக் கனவுகள் அல்ல. அந்தக் கோயிற் சுவர்களில் கல்லெழுத்தால் செதுக்கி வைத்திருக்கும் பழைய வரலாறுகளேயாம். எனவே கோயில்கள் வழிபடும் இடமாக மட்டும் விளங்கவில்லை. வழிபாடுதான் உயிர்நிலை. ஆனால் அதனைச் சுற்றிச் சமுதாயத் துறைகள் அத்தனைக்கும் உயிர்நிலையாகக் கோயில் கள் தழைத்தோங்கின. இன்று மேனாட்டில் கிளர்ச்சி ஒன்று வளர்கின்றது. பள்ளிக்கூடங்களைச் சமுதாய வாழ்வின் நடுவிடமாக அமைத்திவர முற்படும் கிளர்ச்சியே அது. அத் தகைய கிளர்ச்சியின் பயனாகவே சென்ற காலத்திய நம் தமிழ் நாட்டில் கோயில்கள் எழுந்தன. இந்தக் கோயில் எதிர்காலத்தில் எவ்வாறு திருந்தவேண்டும் என்பதனை இந்தப் பழைய வரலாறே நமக்கு விளக்கி வைக்கவில்லையா ?

இந்தப் படமாடும் கோயில்கள் எல்லாம் நடமாடுங் கோயில்க ளாம் மக்களுக்கென்றே எழுந்தன. இந்த உண்மையை மறக்கும்போதெல்லாம் அறிஞர்கள் வற்புறுத்தி வந்துள்ளார்கள். இதனை இந்தத் தமிழ்நாட்டில் புகவிட்டவர் யார் ? பழைய நாள் களில் கோயில்கள் இருந்தன. அவற்றிற்கு அம்பலங்கள் என்றுபெயர். தில்லையில் கூத்தப்பெருமான் ஆடுகிற உள்ளிடம்போல இருப்பதே அம்பலம். அப்படித்தான் மலையாள நாட்டில் ஊர்தோறும் கோயில் கள் இருப்பதனைக் காணலாம்; அங்கு மக்களும் தங்கலாம். மக்களுக் குப் புகலிடமாவது தமிழ் அம்பலத்தின் சிறப்பியல்பு எனலாம். சை னர்களும் புத்தர்களும் தங்கள் தங்கள் அறப்பள்ளிகளில் சமுதாயத்

தொண்டு செய்து வந்தார்கள். இவற்றினை எல்லாம் அறிந்த தொண்டை நாட்டுப் பெருமக்கள் இங்கு ஒரு புரட்சி செய்தனர். அது தான் மேலே கூறிய பெரிய கோயில்கள்.

உலகினை மறந்து கடவுளை வழிபடுவது கடவுள் வழிபாடாகாது. அச்சத்தால் நடுங்கிச் செய்கின்ற பேய் வழிபாடு கடவுள் வழிபாடாகாது. இன்பப் பெருமானை அன்பினால் அகங்குழைந்துருகி வாழ்த்தி வணங்கவேண்டும். அவனுடைய அன்பின் விளக்கமன்றோ உலகமனைத்தும்! நாம் வாழ்வதும் அவனுடைய அருளரல் அன்றோ! கடவுளுக்குப் பல பல இயல்புகள் கூறினாலும் எல்லோரும் தம் அனுபவத்தில் உணர்ந்ததாய் இருப்பது எது? அன்பு அன்றோ; அதுவே கடவுள். "அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்; அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்; அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின் அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே". கடவுள் உலகமாய்ப் பூத்துள்ளான். மண்ணிலும் அவன் கடவுட்டன்மை விளங்குவதால் அன்றோ வளங்கொழித்து நெல்லையும் பழத்தையும் வளர்த்துத் தருகின்றது. அதனைப் பாழாக்காது பண்படுத்திக் காப்பதும் வழிபாடாம். நீரோ நம் உடலுக்கு உற்ற துணை. அதனைப் பலவகையிலும் பாய்ச்சி உலகினை வளர்ப்பதோடு அதனைக் கெடுக்காமலும் இருப்பதும் கடவுள் வழிபாடாம். காற்றும் தூயதாகக் கடவுட்டன்மை நிரம்பி வழியுமாறு வாழுவதே கடவுளுக்கு உகந்த வாழ்க்கை. சூரியன் இல்லையானால் உலகில் பயிர் எது? சூடேது? வாழ்வேது. இத்தனையும் தந்து காலத்தை அளந்து செல்லும் சூரியனையும் திங்களினையும் இயற்கை அழகெல்லாம் ஒருங்கு திரண்ட இரண்டு கடவுட் குடங்களாகக் கண்டு களித்து அவற்றின் ஒளியில் குளித்து மகிழ்ந்து காலத்தினை வீணாக்காது அவற்றினாலாய பயனை எல்லாம் உலகம் உறிஞ்சிக் குடிக்குமாறு செய்யவேண்டும். இந்த இயற்கைப் பரப்பனைத்தும் உயர்ப் பொருள்கள் ஓடியாடும் கூத்து மேடையேயாம். இந்த உயிர்கள் ஒவ்வொன்றிலும் கடவுள் வீற்றிருக்கின்ற காட்சிக்கு உருகி இவர்களுக்கு வழிபாடு செய்வதே உண்மையான

கடவுள் வழிபாடு. அன்பும் சிவமும் ஒன்றெனக் கூறுவது, இந்த வகையால் மட்டுமே உண்மையாம்.

இவ்வளவும் கூறியது "இருநிலனாய்" என்று திருநாவுக்கரசர் பாடிய திருத்தாண்டகத்தின் கருத்தேயாகும். இது அவர் செய்த புரட்சி. அவர் பாடலில் கைத்தொண்டினை வற்புறுத்தக் காண்கிறோம். உழவாரப் படையே அவர் கையில் விளங்கியதாகத் தலைமுறை தலைமுறையாகத் தமிழர் நம்பி வந்தனர். காடு திருத்தி நாடாக்கிக் குளங்கள் தொட்டு, பூந்தோப்புகள் வைத்து இருள் எல்லாம் போக விளக்குகள் ஏற்றி இன்னிசை பாடி இன்ப மூட்டுவதே அவருடைய தொண்டு. அவருடைய அடியாரான அப்பூதி அடிகள் அவரைப் பின்பற்றித் தண்ணீர்ப்பந்தர் முதலிய அமைத்து மக்கள் தொண்டே செய்துவந்தனர் என்ற வரலாறும் இந்தக் கருத்தினையே வற்புறுத்துகிறது. அரசியலாரையும் எதிர் நோக்காது மக்களை ஒருங்கு திரட்டி இத்தகைய பொதுத் தொண்டில் ஈடுபடுத்தியதும் கண்டு "போட்டி அரசு" நிலை நாட்டவந்தார் எனப் பல்லவ அரசர் கருதி அவருக்கு இடையூறு செய்யவந்தனர்போலும்! எனவே அவர் காலத்திலேயே இவருடைய தொண்டு ஒரு பெரிய புரட்சி எனக் கருதப் பெற்றதோ என ஐயப்பட இடமுண்டு. ஆனால் அன்பு வெல்லும். எத்தனை நாள் அதனை ஐயுற்றுக் கிடக்கலாம். அரசரும் இவருடைய அடியவர் ஆனார்; ஆனதன் பயன் என்ன ? புதுமை ஒன்றனை நிலை நாட்டியதாகத் தம்மைத்தாமே அந்தமகேந்திரவர்ம பல்லவர் பாராட்டிக் கொள்கின்றார். புதியவகையில் கோயில்கள் எடுப்பித்தார். கற்கோயில்கள்—சமுதாயத் தொண்டின் உயிர்நிலையாக அமையக்கூடிய கோயில்கள் எங்கும் பரவின. கல்வெட்டுகள் கொண்டு திருநாவுக்கரசரது தொண்டு நெறி, தென்னாட்டுக் கோயில்கள் மாற்றியமைத்ததனை அறியலாம்.

இதுதான் அன்பு நெறி. இதனையே வடமொழியில் பக்திநெறி என்பர். பக்தி என்பது பின்னாளில் பல பல கோலம் கொண்டு

வெறிக் கூத்தும் ஆடியது. ஆனால் அதன் தோற்றுவாய் சமுதாயத் தொண்டேயாம். பக்தி என்கிற நங்கை தமிழ்நாட்டிலிருந்து வடநாடு வந்தாள் எனப் புராணம் கூறுகின்றது. இதிலிருந்து இந்த அன்பு நெறி தமிழர் கண்ட உண்மை என்பது விளங்குகிறது. சங்கநூல்களில் வரும் காதலன்பே உலக மக்களிடையே எல்லாம் பாயும் கடவுள் அன்பாக மாறுவது இயல்பன்றோ? ஆகவே அன்பு நெறி தமிழர் நெறியேஆம். தொண்டை நாட்டு நெறியாம். சென்னை நாகரீகத்தின் பண்பாடும் ஈதே எனக் காண்போம்.

Regd. T. M. No. 110920

"ஸ்வஸ்திக்"

இங்க்

பவுண்டன் பேனாககளுக்கு
பரிசுத்தமான பிரஞ்சிந்திய
தயாரிப்பை ஆதரிக்க
யாவரும்
உபயோகியுங்கள்

SWASTIK INK MANUFACTORY
(*Prop* :—**N. R. N. Chari**)
PONDICHERY

பாரதியின் பெயரால்.....!

'ஞானம்'

அக்டோபர் 13-ம் நாள் அதிகாலை 'கதிரவன் கண் திறக்கும்' நேரத்தில் அதிர்வெடி முழங்க, அறிஞர்கள் வாழ்த்த, மக்கள் ஆனந்தக் கடலில் மூழ்க, எட்டயபுரத்தில் திரு. சி. ஆர். பாரதி மண்டபத்தைத் திறந்துவைத்தார்.

திறப்பு விழாவிற்குப் பின்னர் கண்கவரும் வனப்பு வாய்ந்த பெரிய பந்தலின்கீழ் கவிஞரைப் பாராட்டுவதற்கு அறிஞர்கள் கூடினர். அங்கு திரண்டிருந்த மக்களின் கூட்டம் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தை நினைவூட்டிற்று. நாடாளும் அமைச்சர்கள், நிதி பெருக்கும் வணிகர்கள், இயற்றமிழ் எழுத்தாளர்கள், இசைத் தமிழ்ப் புலவர்கள், நாடகக் கலைஞர்கள் ஆகிய பலதரப்பட்ட ஆற்றலுடையாரும் அவையில் குழுமியிருந்த காட்சி முன்னெப்போதும் காணாததாக இருந்தது.

பாரதி பிறந்தது எட்டயபுரத்தில்; கலைமகள் அருள் பெற்றது புதுவை நகரில்; காலனுக்கு இரையானது சென்னையம்பதியில். இம்மூன்று இடங்களும் பாரதியாரோடு தொடர்பு கொள்வதில் போட்டியிட்டது போலவே, பாரதியின் பெயரால் மண்டபம் எழுப்புவதிலும் போட்டியிட்டன. ஆனால், சென்னையைப் புறங்கண்டு, புதுவையைப் பின்னுக்குத் தள்ளி, எட்டயபுரம் வெற்றி பெற்றது. எட்டயபுரம் பாரதி விழாவால் பெற்றபெருமை எவரும் பொறாமைப் படக்கூடியது. கட்டபொம்முவை அழிக்க ஆங்கிலேயருக்குக் கைகொடுத்ததற்காக தீராப் பழியைச் சுமந்து வந்தது

எட்டயபுர சமஸ்தானம். அந்தப் பழி பாரதி மண்டப விழாவால் மறைந்தே போயிற்று. ஆம், இனி எட்டயபுரம் என்றால் பாரதி நினைவு ஒன்றுதான் கண்முன் நிற்கும்.

மண்டபத் திறப்பன்று அறிஞர் பலர் பேசினர். கண்ணுக்கினிய பந்தலில் கருத்துக்கினிய செவிக்குணவு கிடைக்க இருப்பதால் விழாவுக்கென வந்த மக்கள் அன்று காலை உணவை வேண்டாது குழுமி இருந்தனர்.

தலைமை வகித்த திரு. சி. ஆர். பாரதியாரின் வேதாந்தப் பாடல்களின் விழுமிய பொருளை விளக்கிப் பேசினார். கவிஞரை அகத்திய முனிவருக்கு உவமை காட்டினார். அகத்திய முனிவர் தெற்கு உயர்ந்து வடக்கு தாழ்ந்த காலையில் தெற்கே வந்ததாக புராணம் கூறுகிறது. ஆம், உயர்ந்த தெற்கை ஓரளவு தாழ்த்தி, தாழ்ந்த வடக்கை உயர்த்தி சமநிலை செய்யவே அகத்தியர் வந்தார். ஆனால் நிகழ்ச்சி வேறு விதமாக ஆகிவிட்டது. வடக்கு உயர்ந்து தெற்கு தாழ்ந்து விட்டதை வரலாற்றிற் காண்கிறோம். தாழ்ந்த தெற்கை மீண்டும் உயர்த்தி வடக்கோடு தலைதூக்கி நிற்க பாரதி தோன்றினார். அதனால்தான் அகத்தியர் நினைவு அறிஞர் ராஜாஜிக்கு வந்தது போலும்.

மறைந்த பாரதியாரின் வழிவந்த வாழுங் கவிஞர் நாமக்கல் இராமலிங்கனார் பேசுங்கால் திரு. சி. ஆர். இருக்கையை விட்டு எழுந்து வந்து அன்னாருக்கு தமது கைகளால் மாலையிட்டு வணங்கிய காட்சி காண்போருக்கு மகிழ்ச்சி ஊட்டுவதாய் இருந்தது.

திரு. முத்தையா செட்டியார் (செட்டி நாட்டுக் குமார ராஜா) பேசுகையில், பாரதியாரின் பாடல்களை பள்ளிப்பிள்

ளைகளுக்குக் கட்டாய பாடமாகச் செய்ய வேண்டுமென்றார். ஆவாது ஆர்வம் போற்றற்குரியது. என்றாலும் கட்டாயம் கூடாது. சரக்கு நல்லதாயின் அதைச் சட்டத்தின் மூலம் கட்டாயப் படுத்த வேண்டியதில்லை. பரிட்சையில் மார்க்குகள் பெற்று தேர்வதற்காக மட்டும் நெட்டுருச் செய்யும் நிலையில் பாரதிப் பாடல்களைப் பள்ளியில் திணிப்பது கூடாது. அப்படிச் செய்தால் ஏனைய தமிழ் இலக்கியங்கட்கு ஏற்பட்ட கதி தான் பாரதி பாடல்களுக்கும் ஏற்படும். பாரதிபாடல் இன்று நாடெங்கும், வீதிதோறும், வீடுதோறும், விளையாடும் பிள்ளைகளின் நாவுதோறும், நடமாடுவது, கட்டாயப்படுத்திய தனால் அல்ல. "ஆனந்தப் பள்ளு" பாடலை அறியாத பாலருண்டோ ?

பாரதியின் பெயரால் மண்டபம் எழுப்பிய ரா. கி. அம் மண்டபத்தைத் திறந்துவைத்த திரு. சி. ஆர். அதைப் பாராட்டிப் பேச முன்வந்த அறிஞர்கள், அதைப் பார்த்து மகிழக் கூடியிருந்த மக்கள் அனைவரது கவனத்திற்கும் உரிய ஒரு செய்தியை விழாவில் பேசிய திரு. ப. ஜீவானந்தம் வெளிப்படுத்தினர். பொதுவுடைமை பேசிய பாரதியாரின் பாடல் ஒரு சில மனிதர்களின் தனி உடைமை ஆகிவிட்ட கொடுமையைக் குறிப்பிட்டார். விடுதலை வேண்டிய வீரக் கவிஞனின் கவிதைகள் அடிமைப்பட்டு இருக்கும் அநீதியை அவையில் அரங்கேற்றினர்.

பாரதியின் பாடல்கள் ஒரு சிலரின் தனி உடைமையாய் இருப்பதால் நேரும் கேடுகளை நாடு சிந்திக்கத்தான் வேண்டும்.

திருமதி. D. K. பட்டம்மாள் பாரதியாரின் பள்ளுப் பாட்டை இசைத் தட்டில் பாடியிருக்கிறார். அதில்,

"பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே—வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே—பிச்சை
ஏற்பாரைப் பணிகின்ற காலமும் போச்சே—நம்மை
ஏய்ப்போருக் கேவல்செய்யும் காலமும் போச்சே"

என்ற நான்கு வரிகளைப் பாடாமலே விட்டிருக்கிறார். காரணம் என்ன என்பதை இசைத்தட்டு இயம்பவில்லை. ஆனால், புரிந்துகொள்ள முடிகிறது. மண்டபம் எழுப்ப மனமுவந்து பாடுபட்ட நண்பர் ரா. கி. யால் வெளியிடப்பட்டுள்ள 'கல்கி'—'பாரதி நினைவு மலரி'லும் இந்தப் பாடலின் நான்கு வரிகளும் விடப்பட்டே இருக்கின்றன. தனி மனிதர்கள் மனநிலை இதுவாக பாரதி பிரசுராலயத்தாரின் போக்கும் பிற்போக்காகவே இருக்கின்றது. "பாரதி—காவியங்கள்" என்றமுதல் வெளியீட்டில் 'மறவன் பாட்டு' பிரசுரிக்கப்படவே இல்லை. பின்னர் வந்த பதிப்புக்களில் பிரசுரிக்கப்பட்டது என்றாலும், வரிக்கு வரி வார்த்தைகள் எடுக்கப்பட்டு உள்ளன. முழுக் கருத்தையும் விளங்கிக் கொள்ள முடியாதவாறு அப்பாடல் சிதைக்கப்பட்டுள்ளது.

பாடகியாரின் போக்கு, கல்கியின் கருத்து, பிரசுராலயத்தாரின் மனப்பாங்கு, ஆகிய இவைகளை நாம் கண்டிக்காமல் இருப்பதற்கில்லை. பாரதியாரைப் பாராட்டும் இவர்கள் அவருக்கு மண்டபம் திறக்கும் இவர்கள், அவரை நாடு பாராட்டுவதற்குக் காரணமாயுள்ள, அவரது சீர்திருத்தக் கருத்துக்களைத் திரைபோட்டு மறைக்கக் காரணம் என்ன? குறிப்பிட்ட ஒரு சாதியின் குறைகளை வெளிப்படுத்திப் பாடி இருப்பதால் அதை மறைத்துவிடவேண்டும் என்று மேற்படியார்களின் மனதில் தோன்றி இருக்கலாம். அப்படிச் செய்வதாயின் நாமும் சிலவற்றை அவர்கள் நினைவிற்குக்

கொண்டுவர விரும்புகிறோம். பாரதியாரின் பாடலில் தமிழ கத்தின் வரலாற்றுக்கு, தமிழினத்தின் பெருமைக்கு மாறு பட்ட கருத்துக்கள் பல இருக்கின்றன. ஒன்றைமட்டும் கூறு கிறோம். பாரதியார், குமரிமுதல் இமயம்வரை உள்ள இந்தியாவை 'ஆரிய நாடாக'வும், அதில் வாழும் மக்கள் அனைவரும் 'ஆரிய இனமாக'வும், பல இடங்களில் பாடியுள் ளார். இது வரலாற்றுக்கு முரண்பட்டது. ஆரியர் வரு முன்பே இந்தியா உண்டு; அது தமிழ் இந்தியா. அதில் மக்கள் வாழ்ந்ததுண்டு; அவர்கள் தமிழினத்தார். இது உலக அறிஞர்கள் ஒப்புக்கொண்ட உண்மை. எனவே உரிமையாளரின் பெயரை ஒண்டி வந்தவர்களின் பெயராக மாற்றுவது உண்மைக்கு மாறானதல்லவா ? இதைக்கொண்டு பாரதியாரின் பாடலுக்கு பழி கற்பிப்பதாகக் கருதக் கூடாது. தமிழிற்கும், தமிழினத்திற்கும், தமிழ் நாட் டிற்கும், பெருமை கற்பித்துப் பாடிய பாவலர் பாரதியை மிஞ்சுவாரில்லை. அந்த உயர்ந்த கருத்துக்கள் அடங் கிய பாடல்களை உள்ளத்தில் வைத்துப் பார்க்குங்கால் 'ஆரியர்' என்ற சொல், அச் சொல் வழிப்பட்ட கருத்துக் கள், அவர் வாழ்ந்த காலத்தின் சூழ் நிலையால் ஏற்பட்டது என்று எண்ணி மறுகணமே மறந்துவிடுகிறோம். அந்த வரிகளை வைத்துக்கொண்டு பாரதியாரின் தமிழ்ப் பற்றிற்கு பழி கற்பிப்பவர்களையும் வெறுக்கிறோம்.

ஆனால், திருமதி. பட்டம்மாள், "கல்கி", பிரசுராலயத் தார், ஆகியோர் பாரதியாரின் பாடல்களை தங்கள் மனவழி திருத்த முனைவார்களானால், மற்றவர்களும் தங்கள் இன வழிக்கு ஏற்றவாறு திருத்த முயல்வார்கள் என்பதை தெரி வித்துக்கொள்கிறோம். இப்படி நடக்குமானால் அப்புறம்

பாரதியின் பெயரால் எஞ்சி இருப்பது எட்டயபுரம் கட்டடம் தவிர வேறொன்றும் இருக்காது. இதுதானா நம்மை வாழ்விக்கப் பாடிய பாரதிக்கு நாம் செய்யும் கைம்மாறு.

மேலும், பாரதி பிரசுராலயத்தார் ஒரு சாதியினரின் மனதை உறுத்தும் வரிகளை நீக்குவதோடு நின்றார்கள் இல்லை. தமிழினத்தின் தலையாய தேசிய வீரன்—வ. உ. சி. யின் புகழுக்கும் திரைபோடத் துணிந்துவிட்டார்கள். கலெக்டர் விஞ்சுக்கும் சிதம்பரனாருக்கும் நடந்த வாக்கு வாதத்தைக் குறிக்கும் பாடல்களுக்கு முதற்பதிப்பில் அவ்விருவரது பெயர்களைக்கொண்டே தலைப்புகள் கொடுக்கப் பட்டன. ஆனால், பின்வந்த பதிப்புகளில் ஆங்கிலேயன் தேசபக்தனுக்கு கூறுவது, தேசபக்தன் ஆங்கிலேயனுக்குக் கூறுவது என்று தலைப்புகள் மாற்றப்பட்டுவிட்டன. வ. உ. சி. சிறையில்பட்ட துன்பத்தைக் கேட்டு மனம்பொறாது,

‘மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதும் காண்கிலையோ
மாதரையும் மக்களையும் வன்கண்மையல் பிரிந்து
காதலிளைஞர் கருத்தழிதல் காணையோ’

என்று கண்ணீர் சிந்திக் கடவுளை நோக்கிக் கதறி அழுத பாரதியாரின் பெயராலா, அவரது உயிர்த் தோழருக்கா இந்தக் கொடுமையைச் செய்வது ?

இவ்வளவுக்கும் காரணம் பாரதியின் பாடல்கள் ஒரு சிலரின் தனி உடைமையாக இருப்பதன்றோ? பாரதியின் கவிதைகள் - திரு. சின்னசாமி அய்யரின் மகன் சுப்பிரமணியத்தின் உடைமை அல்ல. தமிழன்னையின் தவப்புதல்வன் சுப்பிரமணிய பாரதியினுடையது. அவருடைய கவிதைத்

திறன் தமிழ் மொழியின் திறன். அவரது வீரநெஞ்சு தமிழ் நிலத்தின் பண்பு. எனவே பாரதியின் கவிதை தமிழினத்தின்—ஏன்?—உலகத்தின் பொதுவுடைமையாக வேண்டும். பாரதி விழாவில் ஒருபேச்சாளர் கூறினதுபோல் பாரதியாரின் கவிதைகளைப் பொதுவுடைமை யாக்குவதால் அவரது குடும்பத்திற்குக் குறையொன்றும் நேராவண்ணம் நாடு பொருள் கொடுக்கும். பிச்சையாக அல்ல; கவிஞனின் குடும்பம் என்ற பெருமைக்கு ஊறின்றி காணிக்கையாக தரும்.

பாரதி விழாவில் தோழர் ஜீவானந்தம் அன்புததும்ப வேண்டினார்; திரு. மெய்யப்ப செட்டியாரும், பாரதியாரின் சகோதரரும், பிரசுராலயத்தாரும் மனமொத்து 'பாரதியின் பாடலுக்கு விடுதலை தந்தோம்' என்று அறிவிக்குமாறு அழைத்தார். ஆனால், ஏனோ, அந்தத் திருவாளர்களின் திருவுள்ளங்கள் கனியவில்லை. பாரதி விழாவைச் சிறப்புற நடத்தியமைக்காக திரு. ரா. கியை மனமார வாழ்த்துகிறோம். நாம் மட்டுமல்ல நாடு வாழ்த்துகிறது. ஆனால், பாரதியின் புகழை மங்கவைக்கும் இருளை அகற்றவும் அவர் முன் வருமாறுவேண்டுகிறோம். அதைத்திருவாவடுதுறை மடம் தந்த வெள்ளி விளக்கால் விளக்கிவைக்க முடியாது. பாரதி தந்த தன்மானச் சுடர் வீசும் தமிழ் விளக்கேற்றி விலக்குமாறு வேண்டுகிறோம்.

தமிழ் இளைஞர் உலகம் வீறுகொண்டு எழுந்து பாரதியாரின் பாடலுக்கு விடுதலை தருமாக. அவரது சீர்த்திருத்தக் கனவை நனவாக்குமாக!

பாரதியார் வாழ்க!

வாழ்வு

—வல்லிக்கண்ணன்

பகலைத் துரத்திக்கொண்டே இரவு வந்தது. எங்கும் பரந்த இருளிலும்கூட வானவெளியிலே மனிதனது கனவுச் சுடர்களைப்போல கணக்கற்ற நட்சத்திரங்கள் மின்னின. உருத்தெரியாத தேவனது இதயப் பட்டறையிலே கிளம்பிச் சிதறிய சிந்தனைச் சுடர்களா அவை? எவ்வாருயினும் அவை மின்னிக்கொண்டேயிருந்தன. மேதாவி மூளை சிதறிவிட்ட மணிகளைப்போலே!

அவைகளுக்கு பிறப்பு இறப்பு கிடையாதா?

நட்சத்திரங்களிலே ஒரு நட்சத்திரம். பூமியைப் பார்த்ததும் அதற்குத் தாங்கமுடியாத சிரிப்பு பொங்கியது. கண்ணைச் சிமிட்டிக்கொண்டே பேசியது:

'முட்டாள் உலகம்! விபரீத மனிதவர்க்கம்! தோன்றி மறையும் அற்பாயுள் ஜந்து. ஆனல், அப்பப்பா, என்ன போட்டி, என்ன அகந்தை, என்ன கொடூர விளைவுகள்! இந்த மனிதர்களது செயல்களே விநோதந்தான். அதிலும் ஆச்சரியம் என்னவென்ருல் இவர்கள் தாங்கள் அமரர்கள் என்று நினைக்கிருர்கள். தனது சகோதரன் மரணத்தால் மறைவதைக்கண்டும், தான் உண்மையை உணராமல், சிரஞ்சீவி என்ற நினைப்புடனே காரியங்களைச் செய்கிருன். ஆனல், அவன் எதிர்பாராத வேளையிலே சாவு அவனை விழுங்கிவிடுகிறது. ஹஹ்ஹஹா! இந்த வாழ்வே ஓர் அற்புதமான புதிர்......ஜாலவித்தை!'

அதனுடைய மோனகீதம் காற்றிலே கலக்கும்பொழுது அதன் கண்களிலே அமரத்துவ ஒளிவீசுவதைக் கண்டு காற்று மெதுவாக நகைத்துக்கொண்டே ஊர்ந்தது.

திடீரென்று முனகல் சப்தம் கேட்கவே நின்று கவனித்தது.

அப்பொழுதுதான் இற்றுவிழும் வெள்ளி அலறிய வண்ணம் தரையை நோக்கித் தலைகுப்புறப் போய்க்கொண்டிருந்தது.

தென்னிந்தியாவின் சிறந்த கலைக் கோவிலாகப்
புதிதாகக் கட்டப்பட்டிருக்கும்

கோவை ஷண்முகா தியேட்டரில்

11—11—47 தீபாவளி முதல் தினசரி

டி. கே. எஸ். சகோதரர்களின் நாடக விழா!

:: ஔவையார் ::

[P. எதிராஜு எழுதியது]

தமிழ் நாட்டின் அறிஞர்களும், பத்திரிகைகளும் "அற்புதம்! ஆச்சர்யம்!!" எனப் புகழ்ந்து போற்றிய தமிழ்க் கிழவி சரிதை.......................

புதன், ஞாயிறு மாலை 6-30; மற்ற நாட்கள் இரவு 9-30 மணி

திங்கள் விடுமுறை

டி. கே. எஸ். சகோதரர்கள், உரிமையாளர்கள்.

இனம் ஒழிப்பும் எதிர் பிரசாரமும்

கோ. மோ. ஜனார்த்தனம்

காங்கிரஸ் சட்டசபைக் கட்சியில் இனாம்களை ஒழிக்க வேண்டுமென்ற கொள்கை நிறைவேற்றப்பட்டதும், ஐயர்—ஐயங்கார்—ஆச்சாரியார்—சாஸ்திரியார்— மடாதிபதிகள்—தஞ்சை நிலப் பிரபுக்கள்—ஆகியோரின் அச்சு உருவாகி விட்டது. திரு. வைத்தியநாத ஐயர் "அற நிலையங்களின் இனாமைப் பறிக்கும் ஆட்சியில் எனக்குப் பதவி வேண்டாம்" என்று ராஜினாமா செய்தார். 'இந்து'ப் பத்திரிகை அதற்கு 'சபாஷ்' போட்டது. "இன்னும் வீரர் உண்டானால் வாருங்கள் வெளியே. அப்புறம் இந்த ஆட்சி நடப்பதைப் பார்த்துவிடுவோம்" என்று ஆணவத்துடன் அறைகூவல் விட்டது. காந்தீயத்திற்காகச் சட்டையைத் தியாகம் செய்த திரு. என். எஸ். வரதாச்சாரியார், "பதவியை விடாமலே, பலங்கொண்டமட்டும் போராடுவேன்" என்று பறை சாற்றினார். அமைச்சர் பதவியைப் பறிகொடுத்தபின் அஞ்ஞாத வாசத்திலிருந்த திரு. பாஷ்யம் அய்யங்கார், "மதத்திற்கு ஆபத்து; கடவுளுக்குக் கஷ்டகாலம் என்றால், கைகட்டி இருப்பேனா? சட்டசபைக் கட்சியின் கட்டளையை மீறியே தீருவேன். காங்கிரஸ் என்னை என்ன செய்கிறது பார்க்கலாம்!" என்று அஞ்சாது அறிக்கை விடுத்தார். இவ்வளவு அறிக்கைகளையும் பத்திரிகைகள் குறைக்காது வெளியிட்டன; குறைகூறாமல் தலைப்புகள் தந்தன. அதுமட்டு

மல்ல; அவற்றை ஆதரித்து கோபாவேசமாய் தலையங்கங்கள் தீட்டின.

இந்த ஆர்ப்பாட்டங்களைக் கண்டு மக்கள் மனங் கொதித்தனர். ஊருக்கு ஊர் மாநாடு நடத்தினர். கட்சி வேற்றுமையின்றித் தலைவர்கள் ஒரே மேடையில் தோன்றி மந்திரி சபையை முன்னேறும்படி முடுக்கலாயினர். ஆனால் அமைச்சர் குழுவுக்கு மக்களின் துணையைப்பெற்று ஆதிக்க வாதிகளை எதிர்த்துப் போரிடத் துணிவு பிறக்கவில்லை. இந்தச் சங்கடத்திலிருந்து காப்பாற்றும்படி காங்கிரஸ் தலைமையினரை வேண்டினர். ஜமீன்தாரர் இனும்தார் ஆகியோரும் டில்லிக்குக் காவடி எடுத்தனர். முடிவு என்ன?

காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு பின்வருமாறு தீர்ப்பளித்திருக்கிறது.

1. ஜமீன்தார்களுக்குத் தரவிருக்கும் நஷ்ட ஈட்டுத் தொகையை அதிகப்படுத்த வேண்டும்.

2. கொடுக்க இருக்கும் நஷ்டயீட்டுத் தொகையின் கடன் பத்திரம் 80 பங்குக்கு அதிகமாகப் போகக்கூடாது.

3. அந்தக் கடன் பத்திரத்துக்குரிய தொகையைக் கொடுக்கும் நாளை இப்போதே நிர்ணயித்து விடவேண்டும். அந்தத் தவணைக் காலமும் குறுகியதாய் இருக்கவேண்டும்.

4. இனும்களை எடுத்து விடத்தான் வேண்டும். ஆனால் இனம்களுக்கு அதிக பட்சமான நஷ்டயீட்டுத் தொகை எவ்வளவோ அவ்வளவையும் உடனடியாக, ரொக்கமாகக் கொடுத்து விடவேண்டும். இதில் குறைப்பதோ

கடன் பத்திரம் தருவதோ, காலத்தைக் கடத்துவதோ கூடாது.

இதுதான் காங்கிரஸ் மேலிடத்தார்—மக்கள் தலைவர்கள் அளித்த தீர்ப்பு.

இந்தத் தீர்ப்பால் நன்மை அடைவோர் மக்களா? மக்களின் பகைவர்களான ஜமீன்தாரர், இனாம்தாரர்களா? ஐயத்திற்கு இடமில்லாமல் கூறுகிறோம், காங்கிரஸ் தலைமையினர் மக்களின் பகைவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்து விட்டனர். ஆதிக்க வாதிகளின் காவடி வெற்றி பெற்றது. அமைச்சர்களும் மேலிடத்து தீர்ப்பை ஏற்றுக் கொண்டு திரும்பிவிட்டனர்.

சென்னை அரசாங்கத்தார் நஷ்டயீடு தரும் கொள்கையை ஆரம்பத்திலேயே ஏற்றுக்கொண்டு விட்டனர். ஆனால், அவர்கள் கணக்குப்படி நஷ்டயீட்டின் தொகை சுமார் 10 கோடி. காங்கிரஸ் தலைமையினரின் கட்டளைப்படி அந்தத் தொகை சற்றேறக்குறைய 25 கோடிக்கு ஏறி விட்டதெனலாம். இதன்படி சென்னை அரசாங்கம் தொகையைக் கொடுக்குமானால், ஒன்று அரசாங்கம் 'இன்சால்வென்ட்' ஆகவேண்டும்; அல்லது நாட்டு மக்களை நசுக்கிப் பொருளை திரட்டவேண்டும்

சென்னை அமைச்சர் குழுவினர் அடிக்கடி தங்கள் கருத்தை மாற்றிக்கொண்டுவிடும் நிலைமை பரிதாபகரமானது. ஜமீன் ஒழிப்பு அளவில் இருந்த பிரகாசம் மசோதாவில் இனாம் ஒழிப்பையும் இணைத்தது இந்த மந்திரி சபைதான். பின்னர் இனாம்களை விலக்கிவிடவேண்டுமென்று

இதே மந்திரி சபை காங்கிரஸ் சட்டசபைக் கட்சிக்கு ஆலோசனை கூறியது. ஆலோசனையைக் கட்சி நிராகரித்த பின்னரேனும் மந்திரி சபை துணிவாக மேற்கொண்டு காரியத்தைத் தொடர்ந்து செய்திருக்கவேண்டும். ஆனால் அமைச்சர் மூவர் டில்லிக்கு ஓடினர். ஏன்? ஆதிக்க வாதிகளைத் திருப்திசெய்யத்தான். மசோதாவில் திருத்தம் செய்யவேண்டும் என்றே அமைச்சர் குழு முடிவு கட்டிவிட்டது. ஆனால் கட்சிக்கு விரோதமாகச் செய்வதற்குத் துணிவில்லை. எனவே தலைமையினரின் தாக்கீதைப் பெற்றுவந்து கட்சி உறுப்பினரைக் 'கட்டுப்பாடு' என்ற பெயரால் அடக்கி ஆள முடற்சிக்கிறது. சுருங்கச்சொன்னால் இன்றைய அமைச்சர் குழுவினர் பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்ற நிலையில் இருந்து வருகின்றனர்.

ஜமீன் ஒழிப்புப் பற்றி அதிகம் சர்ச்சையில்லை. ஜமீன்தார்களே அதை ஆமோதிக்கின்றனர். அவர்கள் வேண்டுவது நஷ்டஈடு என்ற பெயரால் பணமுடிப்பு. ஆம்; பரம்பரையாக செய்துவந்த பாதகச் செயலுக்குப் பணமுடிப்பு. ஒருவரது சொத்தைப் பறிமுதல் செய்யும்போதுதான் நஷ்டஈடு கேட்கலாம்.

ஜமீன்தாரர்கள் நிலத்திற்குச் சொந்தக்காரர்களல்ல என்ற கருத்தை எல்லோரும் ஏற்கின்றனர். ஆகவே ஜமீன் ஒழிப்பில் 'பறிமுதல்' என்ற பேச்சே எழவில்லை. நஷ்டம் என்பதும் அதற்கு ஈடு தருவதென்பதும் நியாயமற்றதல்லவா?

உண்மையில் நஷ்டஈடு கேட்க உரிமை பெற்றவர்கள் ஜமீன் விவசாயிகள். ஏனெனில் ரயத்து வாரி நிலத்து

விவசாயியைவிட இத்தனை காலம் அதிகவரி செலுத்திவந்தார்கள். அதற்காக அவர்கள் நஷ்டஈடு கோரலாம்.

'இனும் ஒழிப்பு' பற்றி தேசிய வாதிகளின் முகாமில் பிளவுதோன்றியிருப்பது மட்டுமல்ல; பித்தலாட்டப் பிரசாரங்களும் நடைபெற்று வருகின்றன.

ஆலயங்களின் இனும்களை ஒழிப்பதால் அவற்றின் அன்றாட நிர்வாகம் தடைபட்டு விடுமென்று வாதிக்கப்படுகிறது. இது ஏமாற்றுப் பிரசாரம். இனும் மசோதாவால் ஆலயங்களின் வருமானத்தில் ஒரு பகுதிதான் பாதிக்கப்படும். அதற்கும் அதிக அளவுக்கு நஷ்டஈடு கொடுக்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. எனவே, இனும் வருமானம் ஒழிந்த பின்னரும் இதர எத்தனையோ வழிகளில் ஆலயங்களுக்கு வருமானங்கள் வந்துகொண்டுதான் இருக்கப் போகின்றன. தனிப்பட்ட நபர்கள் தந்த மானியங்களென்ன? பக்த கோடிகளின் காணிக்கைகளென்ன? இவைகளெல்லாம் இனும் மசோதாவால் பாதிக்கப் போவதில்லை. மயிலை கபாலீஸ்வரர் கோயில் கோபுரத்தைப் புதுப்பிக்கவும், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் கோபுரத்திற்குப் பொன்தகடு பொருத்தவும் எத்தனை லட்சம் ரூபாயை திரட்டினார்கள். இவற்றிற்குப் பொருள்கொடுத்த பக்தர்கள் இனியும் உதவாமலா போய்விடுவார்கள்?

இனும் ஒழிப்பால் எந்த ஆலயத்திலேனும் அன்றாட நிர்வாகம் தடைபடுமானால் கூட அஞ்ச வேண்டியதில்லை. பாலாபிஷேகம், அன்னபிஷேகம், தேனபிஷேகம் போன்ற சாமிக்குக் காட்டி ஆசாமிகள் சாப்பிடும் பூசைகள் தடைபடலாம். இதனாலெல்லாம் மதம் அழிந்துவிடுமா? கடவுள்.என்

ணம்மறைந்துவிடுமா? பூவும், நீரும் பூசனைக்குப் போதாதோ! ஒருவேளை குருக்கள், பட்டாச்சாரியார், அர்ச்சகர் என்ற உழைக்காது உண்ணும் கூட்டத்தினர் பலருக்கு பிழைப்புக்கு வழியற்றுப் போகலாம். அவர்கள் ஆலயத்திலிருந்து வெளியேறி, ஆலைத்தொழிலுக்குச் சென்றால் அதை ஆட்சேபிப்பார் யார்? பிழைப்புக்கு வேண்டியது உழைப்பேயொழிய பித்தலாட்டமல்ல.

மடங்களுக்குரிய இனாம்களை ஒழித்தால் அவற்றின் சார்பில் நடத்தப்படும் கல்விச் சாலைகளும், மருத்துவ நிலையங்களும் மறைந்துவிட நேரிடுமே என்று வாதாடுகின்றனர். மடங்களின் சார்பில் நடைபெறும் எந்த ஒரு நல்ல பணியும் மக்களின் வாழ்க்கைக்கு நன்மை பயப்பதானால் அதை அரசாங்கம் அல்லது ஸ்தல ஸ்தாபனங்களின் நேரடி நிர்வாகத்திற்குக்கொண்டு வந்துவிடலாம்.

மடங்களின் இனாம்களை நஷ்டஈடின்றி ஒழித்துவிடுவதால் மடத்தலைவர்களுடைய சுகபோக வாழ்வுக்குப் பங்கம் நேரலாம். இதற்காக எவரும் கண்ணீர்விடப் போவதில்லை. மடங்களையே அடியோடு ஒழித்து மடத்துச் சாமிகளைப் பத்திரமாக வெளியேற்றி "பசி வந்தபோது இரந்து தின்று, பரலோக சித்தியடையுங்கள்" என்று விரட்டினாலும்கூட அவர்கள் துறவு நிலைக்கு அது பொருந்துவதே யாகும்.

இனாம் ஒழிப்புக்கு சாதித்துவேஷம் காரணமென சிலர் கதைகட்டி விடுகின்றனர். ஐயர், ஐயங்கார், ஆச்சாரியார், ஆகியவர்களின் ஆவேசப் பேச்சுகளும், அறிக்கைகளுமே இதை அறிவிக்கப் போதுமானது. "கதர்ச் சட்டைக்குள் புகுந்து கருப்புச் சட்டையினரின் வேலையைச் செய்வதா?"

என்று ஒரு சில பத்திரிகைகள் படம்போட்டுக் கேட்கின்றன. இனும் ஒழிப்புக்கும், சாதிப் பிரச்னைக்கும் சம்பந்தமேயில்லை. இனும் ஒழிப்பால் குறிப்பிட்ட ஒரு ஜாதியினரின் சோம்பேறி வாழ்க்கை தடைபடுவதாயிருக்கலாம். ஆனால், மசோதாவின் நோக்கம் அதுவன்று. உழவருக்கும், அரசாங்கத்திற்கும் இடையே யுள்ள தரகர் கூட்டத்தை ஒழிப்பதும் எல்லா நிலங்களையும் ஓரே ரயத்து வாரி முறையின் கீழ்க்கொண்டு வருவதும்தான் மசோதாவின் அடிப்படை நோக்கங்கள். இதில் பார்ப்பனத்துவேஷமோ, நாத்திக நாற்றமோ எப்படி இருக்கமுடியும்? ஜமீன் ஒழிப்பில் பாதிக்கப்பட இருப்பவர்கள் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதார். இதை சாஸ்திரிகள் கூட்டம் அறியாததேனோ? இனும்களை ஒழித்தால் கணக்கற்ற குடும்பங்கள் வறுமையால் வருந்த நேரிடும் என்கிறார் திரு. வைத்தியநாதய்யர். "வறுமை" என்ற சொல்லுக்குப் பொருளென்னவோ? அப்படியே ஒரு சிலர் வறுமையில் தள்ளப்பட்டாலும் கூட நல்ல திட்டங்கள்கொண்டு வரும்போதெல்லாம் ஒரு சிலரது வாழ்க்கை தற்காலிகமாகப் பாதிக்கப்படுவது இப்போது தான் புதிதல்ல. மதுவிலக்குத் திட்டத்தால் வாழ்விழந்து வறுமையில் விழுந்த பழங்குடித் தமிழர்கள் பல லட்சக் கணக்கானவர்கள். அவர்கள் துன்ப நிலைக்கு எவரும் பரிவு காட்டவில்லையே!

ஆதிக்க வாதிகள் எவ்வளவுதான் பேயாட்டம் ஆடினாலும், மக்கள் விடப்போவதில்லை. இன்றைய அரசாங்கம் நஷ்டஈடு தந்தேனும் ஜமீன் இனும்களை ஒழிக்கத்தான் போகிறது. இதையடுத்து நாளை வயதுவந்தவாக்காளர்களால் அமைக்க விருக்கும் அரசாங்கம் நஷ்டஈடின்றி சுரண்டல் கூட்டத்தின் சோம்பேறி வாழ்க்கைக்கு முடிவு கட்டப் போவது திண்ணம்.

மதிப்புரை

'லோக சக்தி' : (மாதம் இரு முறை வெளியீடு) ; ஆசிரியர் : ம. கி. திருவேங்கடம் ; விலை நாலணா ; ஆண்டுக் கட்டணம் ரூ. 6-0-0, 35, பந்தர் தெரு, 'சிதம்பரம் நகர்' (ஜி. டி.) சென்னை.

சிறந்த தேச பக்த இளைஞரை ஆசிரியராகக் கொண்ட இந்தப் பத்திரிகை இளைஞர் இயக்கத்தின் சார்பாக வெளி வருவது கண்டு மகிழ்வுடன் வரவேற்கிறோம்.

'புத்துயிர்' (வாரப் பத்திரிகை ;) ஆசிரியர் : வி. நாராயணன் ; விலை இரண்டணா ; 59, வால்டாக்ஸ் ரோட் ; பார்க் டவுன் சென்னை.

தமிழ் இனத்திற்கும், உழைப்பாளி வர்க்கத்திற்கும் புத்துயிரளிக்கும் கட்டுரைகளும், செய்திகளும், தாங்கி வெளி வருகிறது 'புத்துயிர்'. தமிழர் ஆதரிப்பாராக.

'இன ஒலி' : ஆசிரியர் ; ஜி. சீனிவாசன் ; 20, செட்டி தெரு, காஞ்சிபுரம்; விலை அணா 1.

சமூக சீர்திருத்தக் கொள்கைகளைத் தாங்கி வெளி வருவது. சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகளும், மொழி பெயர்ப்புகளும் பொதிந்துள்ளன. தமிழர் ஆதரிக்கத்தக்க பத்திரிகை.

'பிரஜா மித்திரன்' : (மாதமிருமுறை வெளியீடு) ஆசிரியர் : கு. இராமசாமி ; புதுக்கோட்டை விலை நாலணா.

'கலை அரசு' ; (திங்கள் வெளியீடு) ஆசிரியர் . அருணன் ; 10, அப்பு முதலி தெரு, மயிலாப்பூர், சென்னை. விலை நாலணா ;

சிறந்த காட்சிப் படங்களும், கலை வாணர்களின் உருவப்படங்களும் கலைக்கட்டுரைகளும் நிரம்பியது.

'கலைப் பிறை' (இலக்கியத் தொகுப்பு) பதிப்பாசிரியர் : பி. சுந்தரமூர்த்தி ; கலைக்கழக வெளியீடு ; திருப்பத்தூர், வட ஆற்காடு, விலை ரூ. 1-0-0.

அறிஞர்கள் மு. வ., கி. வா. ஜ, ம. ரா. போ. குருசாமி, தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், ஈ. த. ராஜேசுவரி அம்மையார் ஆகிய வர்களின் அரிய கட்டுரைகள் அடங்கியது. நல்ல காகிதத்தில் சிறந்த முறையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

திராவிடஸ்தான் : எழுதியவர் : திரு. எஸ். முத்தையா, பி. ஏ., பி. எல்., வெளியிட்டோர் : 'திராவிட மணி' பதிப்பகம் திருச்சி, விலை பத்தணா.

திராவிடர் கழகத்தின் அரசியல் கொள்கையை விளக்கும் நூல். நூலாசிரியர், சென்னை மாகாணமே திராவிட நாடு என்கிறார். அந்நாடு வட இந்தியாவிலிருந்து பிரியவேண்டியதற்கான காரணங்களையும் விவரித்திருக்கிறார். "திராவிட நாடா ? தமிழ் நாடா ?" என்ற சர்ச்சைக்கு பதிலளிக்குமிடத்தில் தெளிவில்லை. தமிழரசு வாதிக ளின் ஒத்துழைப்பைக் கோருகிறார். ஆனால், ஒத்துழைப்பு எந்த அடிப்படையில் இருக்கமுடியும் என்பதை விளக்கவில்லை. திராவிட நாட்டின் அரசியல், பொருளாதாரம் ஆகியவை எப்படி யிருக்கும் ? நான்கு மொழியினரையும் ஒன்றுபடுத்தும் பொது மொழி எது ? மொழி வழி தோன்றியுள்ள எல்லைச் சிக்கல்களைத் தீர்ப்பதெப்படி ? என்பவற்றை தொட்டுக்கொள்ளாமலே விட்டிருக்கிறார். முட்டுக் கட்டைகளைத் தீர்க்க முயலாத விடத்து முன்னேறுவதெப்படி ? பொதுவாக திராவிட இயக்கத்தின் பிரிவினைக் கிளர்ச்சியை ஓரள வேனும் உணர்ந்துகொள்ள உதவிபுரிகிறது.

'திருவள்ளுவர்' : (மாதப் புத்தகம்) பதிப்பாசிரியர் : சி. இ. பத்ம நாபன் வெளியிட்டோர் ; நக்கீரர் கழகம் ; 29, கொண்டலையர் தெரு, சென்னை. விலை எட்டணா.

வள்ளுவர் குறளின் விழுமிய பொருட்களை இயல், இசை, நாட கம், என்ற முத்தமிழ் வழியே முறைப்பட விளக்கும் கட்டுரைகள், பாடல்கள், நாடகங்கள் பலவற்றைத் தாங்கியுள்ளது. தமிழ் வளர்ச் சிக்குப் பாடுபடும் இளைஞர்களால் நடத்தப்படுவது நக்கீரர் கழகம். அதன் தலைவரே இதன் ஆசிரியர். தமிழர் இல்லந்தோறும் 'திரு வள்ளுவர்' குடி புகட்டும்.

திருமா பத்தினி: இயற்றியவர்: தி. இராமலிங்கம் : பி.ஏ. எல்.டி.; 110 பக்கங்கள் ; விலை ரூ. 1-10-0. கிடைக்குமிடம் : 79, கல்லத்தி முக்குத் தெரு, திருநெல்வேலி.

சிலப்பதிகாரக் கண்ணகியின் கதையை விரித்துரைப்பது இந்நூல். ஆங்காங்கே சிலப்பதிகாரத்திலிருந்து சுவை மிக்க பாக்களும் மேற்கோளாகப் பிற நூற்பாக்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆசிரியரின் இனிய தமிழ்நடை போற்றத்தக்கது. செந்தமிழில் சிறந்த காவியமாகிய சிலப்பதிகாரத்தை எல்லோரும் எளிதில் படித்து அனுபவிக்கும் வகையில் எழுதப்பட்டுள்ள இந்நூலைத் தமிழர் படித்துப் பயன் பெறுவாராக.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு: திருப்பனந்தாள் காசி மடத்து வெளியீடு: 600-க்கு மேற்பட்ட பக்கங்களுடையது. விலை குறிப்பிடவில்லை.

ஸ்ரீ குமரகுருபரர் இயற்றிய பல பிரபந்தங்கள் இதில் அடங்கியுள்ளன. சுதந்தரத் தமிழகத்தில் மன்னர்களால் போற்றப்பட்ட புலவர்கள் அறம், பொருள், இன்பம் பற்றி நூலியற்றி மக்கள் வாழ்வாங்கு வாழ வழி காட்டினர். ஆனால் தமிழரசு மறைந்து தமிழகம் அடிமைப்பட்ட பின்னர் தமிழ் இனம் வாழ்விழந்தது. தமிழ்மொழிப் புலவர்கள் ஆதரிப்பாரற்று அல்லலுற்று மடங்களில் அடைக்கலம் புகுந்தனர். நாட்டை வெறுத்து வீட்டை (மோட்சத்தை)ப் பாடினர். அதனால் அமைதி பெற்றனர். அவ்வாறு வீடு பேறு வேண்டிய நூல்களின் வரிசையில் தலையாயது இந்நூல். இன்றோ தமிழகம் விடுதலை பெற்று வருகிறது. மறுமலர்ச்சித் தமிழ் மக்கள் மடியில் தவழ்ந்து விளையாடுகிறது. புலவர்களுக்கு மக்கள் வெள்ளிப் பணமுடிப்பும் பொன்னுடையும் தருகின்றனர். இந்நாளில் குமரகுருபரர் பிரபந்தத்திலுள்ள பொருளில் அறிவைச் செலுத்தாமல் புலமையை மட்டும் அனுபவிப்பதே நல்லது. புலவரின் கற்பனைத்திறன், சுவை மிகுந்த சொற்கள் தமிழார்வமுள்ளவருக்கு விருந்து போன்றவை.

வெளியிட்டோர் : ம. பொ. சிவஞானம், 1-29, இருசப்ப கிராமணி தெரு, திருவல்லிக்கேணி சென்னை. அச்சிட்டோர் திரு. கே. தி. நாகலிங்க முதலியார் செங்குந்த மித்திரன் அச்சகம் சென்னை.

தமிழ் முரசு

(மாதம் இருமுறை)

உள்நாடு

ஆண்டுச் சந்தா	ரூ.	6—0—0
6 மாதச் சந்தா	ரூ.	3—0—0
தனி இதழ்	ரூ.	0—4—0

வெளிநாடு

ஆண்டுச் சந்தா	ரூ.	7—0—0
6 மாதச் சந்தா	ரூ.	3—8—0
தனி இதழ்	ரூ.	0—5—0

விளம்பர விகிதம்

(ஒரு இதழில் வெளியிட)

அட்டை (வெளிப்புறம்)	ரூ.	100.
அட்டை (உட்புறம்)	ரூ.	75.
புத்தகத்துள் ஒரு பக்கம்	ரூ.	50.
புத்தகத்துள் அரைப்பக்கம்	ரூ	25.

தமிழ் முரசுப் பதிப்பகம்

திருவல்லிக்கேணி :: சென்னை

Wrapper Printed at the Sengundha Mithran Press, Madras 1